# திசை

THISAI


## வெள்ளையரின் உரிமைகளையும் பேண வேண்டும் — மண்டேலா

சென்ற ஞாயிறு விடுதலைசெய்யப்பட்ட நெல்சன் மண்டேலா கண் மூடித்தனமான வன்முறைகளைக் கண்டித்துள்ளார்.

அவர் சிறையை விட்டு வெளிவந்து நிகழ்த்திய உரையின்போது, இன்று நிலையான வாழ்வு, சமாதானம் ஆகியவை அவசியம் என்று கூறியதோடு, ஒடுக்கப்படும் பெரும்பான்மையினரின் மனித உரிமைகளுக்காகப் போராடும் அதேநேரத்தில், கறுப்பின மக்களை ஒடுக்கும் வெள்ளையரின் மனித உரிமைகளையும் பேணவேண்டும் என்றும் கூறினார்.


திசை 2 | 16-2-1990 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 5-00 | பக்கங்கள் 12 | முகம் 5



நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# வடக்கு - கிழக்கு மாகாண சபையை கலைப்பதில் எழுந்துள்ள பிரச்சினை

**விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ள முன்வரும் பட்சத்தில், மாகாண அரசைக் கலைத்து, புதிய தேர்தலை தாம் நடத்தத் தயாராய் இருப்பதாய் வடக்கு - கிழக்கு மாகாண அரசின் முதல்வர் வரதராஜப் பெருமாள் முன்னர் பகிரங்கமாக அறிவித்திருந்தது தெரிந்ததே.**

ஆனால் தற்போது இந்தியாவுக்குச் சென்று அண்மையில் கொழும்பு திரும்பியுள்ள வரதராஜப்பெருமாள், தமது முன்னைய நிலைப்பாட்டுக்கு மாறான கருத்தை வெளியிட்டுள்ளார். இது பற்றி அவர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்குக் கொடுத்தசெய்தியில் இலங்கை அரசாங்கம் வடகிழக்கு மாகாண அரசைக் கலைக்க நடவடிக்கை எடுக்குமானால் அதைவிட முட்டாள்தனம் வேறு இருக்க முடியாதென்றும், தமது மாகாண அரசு சட்ட ரீதியாக நிறுவப்பட்டதென்றும் கூறியுள்ளார்.

இதே பத்திரிகையில் இந்தியப்படை விலகியதன் பின்னர் வடகிழக்கு மாகாணத்தின் நிலைபற்றிக் கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, இந்தியப் படை நீங்கியதன் பின்னர் மாகாண அரசைக் கலைப்பதற்கு அதன் முதல்வர் பெரிதும் தயாராய் இருப்பதாகவும் இது ஏனைய அமைப்புகள் ஜனநாயக வழிக்கு திரும்புவதற்கு உதவும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை மாகாண அரசு கலைக்கப்பட்டு, பாரபட்சமற்ற சுதந்திரமான தேர்தல் இடம் பெறுதவரைக்கும் தாம் எந்த ரீதியிலும் மாகாண அரசில் பங்கு பற்ற முடியாதென்று விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை அரசுக்கு தெட்டத் தெளிவாகக்கூறியுள்ளனர். இந்நிலையில் அரசாங்கம் எதைச் செய்ய உத்தேசித்துள்ளது என்பதே இன்றைய அரசியல் அவதானிகளின் முக்கிய அக்கறையாகும்.

விலகிச் செல்லும் இந்தியப் படையை தடுத்து நிறுத்த முயற்சிகள் எடுத்த வரதராஜப் பெருமாள் அதில் தோல்வியுற்றிருப்பதாகவே பி. பி. சி. வானொலி அறிவித்துள்ளது. இதனால் அரசாங்கம் மாகாண அரசைக் கலைக்கும் நெருக்கடிகள் ஏற்பட முன்னரே வரதராஜப் பெருமாள் தமது பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்றும் சில உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகிறது.

## சிறுபான்மை இனப் பிரச்சினை சுப்ரீம் சோவியத்தில்!

இன்று ரஷ்யாவில் தோன்றியுள்ள சிறுபான்மை இனங்களின் போராட்டத்திற்கு பரிகாரம் தேடுவது போல் தற்போது கூட்டப்பட்டிருக்கும் சுப்ரீம் சோவியத்தில் கொர்பச்சேவ், ஆர்மேனிய, அஸர்பைஜான், தாஜிக்ஸ் தான் போன்ற இனக்குழுக்களின் அதிகாரப் பரவலாக்கத்தோடு கூடிய சமஷ்டி ஆட்சிக்கான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

முன்னைய சோவியத்அரசினால்


(12 வம் பக்கம் பார்க்க)


## சர்வகட்சி மாநாட்டின் முக்கிய சிபார்சுகள்

இளைஞர் அமைதியின்மை குறித்து ஜனாதிபதியின் ஆணைக் குழுவின் சிபார்சுகளை ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் 44 சிபார்சுகளை அரசாங்கம்ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு:

அவசரகாலச் சட்டம் விரைவில் நீக்கப்படுதல், சட்டவிரோத ஆயுதக் குழுக்களை அகற்றுதல், தீவிரவாத இயக்கங்களில் ஈடுபட்டோர் சரணடைவதற்காக ஒரு நம்பிக்கையான சுயநிர்ணயக் குழுவொன்றை நியமித்தல், ஆயுதப்படை, பொலிஸ் ஆகியவற்றின் அராஜகத்தை அகற்றுதல், திறமை அடிப்படையில் பதவி வெற்றிடங்களை நிரப்புதல், ஆங்கிலத்தை மூன்றும் வகுப்பிலிருந்து கட்டாய பாடமாக்குதல், 1991 இல் இருந்து தமிழ் மாணவர் சிங்களத்தையும் சிங்கள மாணவர் தமிழையும் கற்பதைக் கட்டாயமாக்குதல்.

இவற்றோடு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிக் கோவை தயாரித்தல், மேலும் 18 - 40 வயதுக்குட்பட்ட இளம் வயதினர் மாகாண சபையில் வேட்பாளராக இடம்பெறுவதற்கு வழி வகுத்தல் போன்றவையும் அடங்கும்.

## மலையகத்தில் புதிய தீவிரவாத இயக்கம்?

தற்போது மலையகப் பகுதியில் 'தமிழ் ஈழ விடுதலை முன்னணி' என்னும் புதிய இயக்கம் தோன்றியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி இயக்கம் பதுளை பண்டாரவளை, ஹப்புத்தளை போன்ற பகுதிகளில்நிலையூன்றியுள்ளதாகவும் அப்பகுதிகளில் உள்ள மலையக இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

கிழக்குமாகாணப் பகுதியின் தீவிர வாதிகளோடு தொடர்புடையதாக நம்பப்படும் இவ்வியக்கம், அப்பகுதியிலிருந்து நவீன ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதோடு ஜே.வி.பியோடும் தொடர்பு கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## தேசியக் கவுன்சிலிலிருந்து ஈ. பி. ஆர். எல். எவ். ஏன் விலகியது?

ஈ. பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ, புளொட் ஆகிய தமிழ் இயக்கங்களால் அமைக்கப்பட்ட தேசிய கவுன்சிலிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் தன்னை விலக்கிக் கொண்டதற்குரிய காரணங்கள்பற்றி இன்று பலவித யூகங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதுபற்றி 'ஐலன்ட்' பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், தேசியக் கவுன்சில், தமிழ் தேசிய ராணுவம் போன்றவை மூலம் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தமிழ் இன உணர்வைப் பேண வைத்து, இலங்கையை, இந்திய அரசு பிரித்தாள முயற்சித்தது என்றும், ஆனால் விடுதலைப்புலிகளின் புத்தெழுச்சிக்குப் பின்னர் இது அர்த்தமற்றுப் போய் விட்டதால் இதன்தேவை அனுவசியம் எனக் கருதியதாலும், இதில் பல லட்சக்கணக்கான ரூபா குளறுபடிக் குள்ளாகியிருப்பதாலும் இதில் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புகளின் நடவடிக்கைகளால் தமிழ் நாட்டு அரசைப் பகைக்கவேண்டி ஏற்படலாம். எனக் கருதியதாலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தன்னை இதிலிருந்து விலக்கிக் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

## துக்கம் அனுஷ்டிப்பு

திருகோணமலையில் உள்ள ஈ.என்.டி.எல்.எவ் முகாம் ஒன்றைத் தாக்கிவிட்டு கடல் மார்க்கமாகத் திரும்பிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 36 போராளிகளுள் 22 பேர் கடலில் நேர்ந்த விபத்தின் காரணமாக மரணமாயினர். இந்நிகழ்ச்சி கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது. இறந்து போன போராளிகளுக்காக தமிழ்ப்பகுதிகளெங்கும் அஞ்சலியும் துக்கமும் அனுஷ்டிக்கப்பட்டது.

## சர்வகட்சி மாநாட்டில் பெரும் குறை

'தமிழ் மாணவர்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி வருவதும், இன்றைய ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தகமாகிய தரப்படுத்தல் முறைபற்றி சர்வகட்சி மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்படாதமை பெரிய குறையென மாநாட்டில் பங்குபற்றிய தமிழ் அரசியல் அமைப்பினர் சிலர் கருதியதாகத் தெரிகிறது.

தரப்படுத்தல் முறைபற்றி இதில் விவாதிக்கப்பட்டு அதை அகற்றுவதற்கான வழிகளும் முன்வைக்கப்பட்டிருந்தால் சர்வகட்சி மாநாடு இன்னும் ஆழமான விஷயங்களை அலசிய ஓர் களமாக உயர்வடைந்திருக்கும் எனக்கூறப்படுகிறது.

## ஏயர் பஸ்ஸும் போர்பஸ்ஸும்

146 பிரயாணிகளை ஏற்றிச் சென்ற 'எயார் பஸ்' (AIR BUS) என அழைக்கப்படும் நவீன விமானம் பெங்களூரில் விபத்துக்குள்ளானது. 90 பிரயாணிகள் கொல்லப்பட்டனர்.

ராஜீவ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட இந்த நவீனரக பஸ்கள் ஏற்கனவே பல தடவை விபத்துக்குள்ளாகி உள்ளன என்பதால், இதுவும் ராஜீவின் போர்பஸ் ஆயுதக் கொள்வனவு போன்ற ஒன்று எனச் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## 'ரே' முஸ்லிம் கொங்கிரசுக்கு உதவுகிறது

— முஸ்லிம் ஐ. வி. மு.

தமிழர் முஸ்லிம்கள் மத்தியில் கருத்து வேற்றுமையை ஏற்படுத்தி, அதன்மூலம் இந்தியாவின் தாக்கம் இங்கு தொடர்ந்திருக்கச் செய்வதற்காக இந்தியப் புலனாய்வு நிறுவனமான 'ரே' முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப்ற்கு உதவுவதாக, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் ஜனாப் எம். ஐ எம்.


(12 ஆம் பக்கம் பார்க்க)



'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை



நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

திசை
THISAI

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 300/-
அரைவருடம்–ரூபா: 150/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:


118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# பரிந்துரைகளும் செயற்பாடுகளும் தாமதமில்லாது நிகழும் காலம் வருமா?

முன்பு ஒரு திசை இதழில் 'குழுக்களும் கடமைகளும்' என்ற தலைப்பில் திரு. நா. மாணிக்க இடைக்காடர் ஒரு அருமையான கட்டுரையை எழுதி இருந்தார். அவர்கள் இலங்கை அரசில் உயர் பதவிகள் வகித்தவரும், பழுத்த அனுபவஸ்தரும் ஆவார். அவரின் கருத்துக்கள் என்றும் இலங்கை அரசிற்கும், மக்களுக்கும் பயன்படும்.

இலங்கை அரசியலில் சிக்கலான தேசியப் பிரச்சினைகளுக்கு அரசும், அரசின் அங்கமாகிய மந்திரிகளும் குழுக்களையே நியமிக்கின்றனர். இதனால் இவர்கள் மக்கள் ஆவேசத்தினின்றும் தப்பிக்கொள்கிறார்கள். இக் குழுக்களின் அறிக்கைகள் கிடைக்க மாதக் கணக்கிலும், வருடக் கணக்கிலும் காலம் சென்று விடுகின்றது. மக்களும் பிரச்சினைகளை மறந்து விடுகின்றனர். மேலும் இவ் அறிக்கைகள் அமுல்படுத்தப்படாது தூங்குகின்றன. சுதந்திரத்திற்குப் பின்பு எத்தனையோ குழுக்கள் நியமிக்கப்பட்டன. குழுக்களின் அறிக்கைகள் மிகச் சிலவே அமுல் செய்யப்பட்டன. ஒரு கண் துடைப்புக்காகவே இவைகள் யாவும் செய்யப்படுகின்றன என்றே சொல்லலாம்.

கடந்த காலத்தில் நடைபெற்ற பிரசித்திபெற்ற சன்சோனிக் கொமிஷன் விசாரணையில் ஒரு பொலிஸ் அதிகாரி தனது வாழ்நாளில் பல றோயல் கொமிஷன்களைப் பார்த்ததாகவும், ஒன்றும் நடக்கவில்லை என்றும் பிரஸ்தாபித்தார். அரசானது திரிகரணசுத்தியோடு குழுக்களை நியமிக்க வேண்டும். மிகக் குறுகிய



காலத்தில், முழு அளவில் அமர்வுகளை நடத்தி அறிக்கைகளை அரசுக்குக் கொடுக்க வேண்டும். அவ் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளைச் செவ்வனே அமுல்செய்த பின்பே அதன் பெறுபேறுகள் தெரியும். அத்தகைய நிலை என்று உருவாகுகின்றதோ அப்போது தான் இந்நாட்டிற்கு பல நன்மைகள் உண்டாகும்.

செ. குமாரசாமிப்பிள்ளை,
வல்வெட்டித்துறை.

### விளம்பரங்கள் பற்றி...

தூரத்தால் எட்ட நின்றும் 'திசை'யைத் தவறாது பெற்றுப் படித்துவருகின்ற என்னுள், கடந்த சில வாரங்களாக (மார்கழி) 'திசை'யின் தரம் குறைகின்றதோ என்ற ஏக்கம் ஏற்பட்டு வந்தமையை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 'திசை'யின் பக்கக் குறைவுகளுடன் ஏற்பட்ட விடயக் குறைவுகளும், விளம்பர அதிகரிப்பும் கூட இதற்குக் காரணமாகலாம். விளம்பரம், பற்றிக் குறிப்பிடும் போது சில வாரங்களுக்கு முன்னைய 'திசை' களில் வெளி வந்த 'திருமண ஒழுங்குபடுத்தல்' பற்றிய ஒரு விளம்பரத்தில் 'சாதி' பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தமை என்னைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 'திசை' ஒரு முற்போக்குத்தனமான வெளியீடு என்று கொண்டிருந்த எண்ணத்தில், அது மண்ணைத் தூவுவதாக இருந்தது. ...... இருந்தாலும் 12-1-90 ஆம் திகதிய சிறப்பிதழ் முன்னையதைப் போன்று ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தினாலும், 'தூவானம்' பகுதி இல்லாதது ஒரு குறையாக உறுத்தியது.

S. நந்தலக்ஷ்மன்,
கொழும்பு.

### திசை பிற[illegible]

'திசை' ஓராண்டு நிறைவு மலர் சிறந்த முறையில் வெளி வந்திருப்பது வரவேற்கத் தக்கது. எந்நிலையிலும் 'திசை' பிறழாது உறுதியுடன் வெளிவரும் என்பதை இம் மலர் உறுதிப்படுத்துகிறது.

இவ்விதழில் வெளியான 'தமிழ் உரிமைச் சட்டங்களும் பேரினவாத மரபும் — மிகப் பொருத்தமான பயனுள்ள கட்டுரை. இது போன்றவை தொடர்ந்து வெளிவரவேண்டும்.

மலையக எழுத்தாளர்களுக்கு முக்கிய இடம் கொடுத்திருப்பதை மிகப் பாராட்டுகின்றேன்.

ஐ. தி. சம்பந்தன்,
கொழும்பு-6

---

"மகா சிவராத்திரி"

"அரசனார் அழல் உருவாய்
அங்கே அளவிற்கு
பரமாகி நின்றவா
தோள் நோக்கம்
ஆடாவோ"
— திருவாசகம்

மில்க்வைற் சோப் மேலுறையிலிருந்து 25 திருக்குறள் அனுப்பி

"சிவராத்திரி வரலாறு வெளியீடும்"
"சிவ சிவ" ஸ்ரிக்கரும்
பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

பிரயோக கணிதம்

பிரிவு 1990:- மாதிரி வினாத் தாள்களும், விடைகளும்; "காவியும் அதன் பிரயோகங்களும்" படிமுறைப் பயிற்சி நூல்.

பிரிவு 1991:- "நிலையியல் பகுதி 1" படிமுறைப் பயிற்சி நூல். சகல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.

ஆசிரியர்:
சி. துரையப்பா
St. John's College,
JAFFNA.

C—16

# இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தது ஏன்?

முற்றொடர்

இறுதியாக இலங்கையில் நடைபெற்ற தேர்தல் எமக்கு எதைக் கட்டியங் கூறுகின்றது? இதனோடு சம்பந்தப்பட்ட சிலவற்றை நான் ஏற்கெனவே விளக்கியுள்ளேன். 11 ஆண்டுகளுக்குப் பின் ஜனநாயகம் மீளுயிர்ப்புப் பெற்றுள்ளது, இதனால் அதிதீவிர சக்திகள் மறையாவிட்டாலும் மழுங்கடிக்கப்பட்டுவிட்டன.

நாம் முடுக்கி விட்டுள்ள போக்குகள் தொடர்ந்து பேணப்படுமாயின், சிங்களவர் மத்தியிலும், தமிழர் மத்தியிலும் காணப்பட்ட தீவிரவாத சக்திகள் ஓரத்திற்குத் தள்ளப் பட்டுவிடும். இலங்கை அரசைப் பொறுத்தவரை, தமிழரின் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ செவிசாய்க்க வேண்டும். முன்னைநாள் ஜனாதிபதியின் இரட்டைத்தன்மை கொண்ட நடைமுறைகளை பிரேமதாஸ கையாளக் கூடாது. முதலாவதாக, அதிகாரப் பரவலாக்கத்திற்கு வழிகோலும் சட்டங்களை அவர் பூரணமாகச் செயற்படுத்த வேண்டும். இவ்விடயத்தில், அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ தடைகளைப் போடுவதற்கு அவர் இடமளிக்கக்கூடாது. அதிகார அமைப்பில் இடம்பெற்றுள்ள தமிழ்க்குழுக்கள் ஒதுங்கி நில்லாது, முன்நிபந்தனை — கோரிக்கைகளை — முன் வைக்காது, நிறுவன அமைப்பினூடாக தமது இலட்சியங்களை நிறைவேற்ற முயல வேண்டும்.

இந்திய அரசாங்கம், ராஜதந்திர, அரசியல் வழிகளில் இலங்கை அரசாங்கத்தை நெருக்கி, தமிழரின் இலட்சியங்கள் பூர்த்திசெய்யப்படுவதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர் கொடுத்த வாக்குறுதிகளையும், அவர் அதிகாரத்திற்கு வருமுன்னர் அவரது கட்சி கொடுத்த வாக்குறுதிகளையும் அவர் நிறைவேற்றுவாரானால் அவரைக் கவிழ்க்கவோ அல்லது அவர் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கு அச்சுறுத்தலாகவோ இருக்கமாட்டோம் எனப், பிரேமதாஸவிற்கு நாம் சமிக்ஞைகளால் உணர்த்த வேண்டும்.

நடந்து முடிந்த தேர்தலில் சிங்கள மக்கள் நடுவழியைக் கடைப்பிடிக்கும் ஜனநாயக

ஜே. என். தீக்ஷித்

சக்திகளுக்கு வாக்களித்துள்ள போது, தமிழ் மக்கள் மையத்திற்கு இடப்பக்கத்திலுள்ள கட்சிகளுக்கு வாக்களித்துள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியை முற்றாக அவர்கள் நிராகரித்துள்ளனர். அடிப்படை மாற்றத்தை விரும்பும் இளைஞர்களையே, அவர்கள் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்துள்ளனர். இலங்கை அரசியலில் முகிழ்த்துள்ள இப்போக்கு அவதானிக்கப்பட வேண்டியது, வளர்ச்சிப் போக்குகளைப் பாதிக்கவல்லது.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவுகளைப் பொறுத்தவரை, தேர்தலுக்கு முன்னர் பிரேமதாஸவின் மேடைப் பேச்சுக்கள் எவ்வாறாகவிருந்த போதிலும், நாம் அவரை நெருக்குவாரங்களுக்கு உட்படுத்தமாட்டோம் என அவர் நினைக்கும் வரை படகினை அபாயகரமாக உலுப்பி நிலைமையைக் குழப்பமாட்டார் என்பதே எனது கணிப்பு. அதே நேரம் தமிழ்ப் போராளித்துவம் தனக்கு ஆபத்தை ஏற்படுத்தும் கட்டத்திற்கு வளர்ந்து உறுதிப்படுத்துவதை, எம்மிடம் அவர் எதிர்பார்ப்பார். எனவே பரஸ்பர உதவி சமநிலை பேணப்பட்டால், எமது உறவுகள் மெல்ல, மெல்ல ஆக்கபூர்வமான வழிகளில் வளரும் என நான் நினைக்கிறேன்.

நான் மேற்கூறியவை எல்லாம் சில எடுகோள்களின்மேல் கட்டியெழுப்பப்பட்டவை என்பதை, வற்புறுத்த விரும்புகிறேன். ஆனால் சில எதிர்பாராத நிகழ்வுகளுக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். பிரேமதாஸவின்மீது ஜே வி. பியின் அழுக்கம், பொருளாதார நெருக்கடிகள், விலைவாசிகளின் உயர்விற்கு எதிரான சிங்கள மக்களின் எழுச்சி, தாம் இதுவரையும் வென்றெடுத்ததைக் கட்டிக் காப்பதற்கு தமிழரின் இயலாமை, தமிழ்ப் போராளித்துவத்தின் எழுச்சி.

எனவே, எதிர்காலத்தில் நிகழக்கூடியவற்றைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் 1983 இல் எமக்கில்லாத பாதுகாப்பொன்று இப்பொழுது உண்டு. இப்பொழுதுள்ள அமைப்பிற்குள் முரண்படாத ராஜதந்திர, பாதுகாப்பு கொள்கைகளைச் செயற்படுத்தலாம். அவ்வாறு செய்யும்போது, நாம் எமது நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அதே வேளை, அண்டை நாட்டை நாம் இரண்டாகப் பிரித்தோம் என்ற குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்படாது நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். (முற்றும்) □

துரிதமாக விற்பனையாகிறது !

நங்கை - 4

[ பெப்ரவரி 1990 ]

மாதர் மாத இதழ்

எங்கும் கிடைக்கும்

# நான் ஜே. வி. பி. யையும் தமிழ் இளைஞர்களையும் கவனத்தில் எடுக்கவில்லை — ஜே. ஆர்.

கடந்த வாரம் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு ஜே ஆர். ஜயவர்த்தன பேட்டி அளித்திருந்தார். அப்பேட்டியின் மூலம் ஜே. ஆரின் இயலாமையையும் அவர் தன்முனைப்பாக நடந்து கொண்டதன் விளைவுகளையும், பேட்டிகண்ட முன்னைநாள் ஐலண்ட் பத்திரிகையின் ஆசிரியரான விஜித யாப்பா என்பவர் 'புட்டுக்' காட்டியுள்ளார்; அப்பகுதிகளை இங்கே தருகிறோம்.

**கேள்வி:** 1982 இல் நீங்கள், (நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்தவேண்டுமா இல்லையா? என்பது பற்றி அறிவதற்காக) நடத்திய சர்வஜன வாக்கெடுப்புத் (Referendum) தான் மிகப்பெரிய தவறென நீங்கள் நினைக்கவில்லையா?

**பதில்:** யார் சர்வஜன வாக்கெடுப்பைப் புறக்கணிப்பார்? அதுதான் ஜனநாயக நாடுகளில் செய்யப்படுவது. இதற்குமுன்னர் 1975 இல் நாடாளுமன்ற உறுப்பினரின் வாக்களிப்பு மூலம் திருமதி பண்டாரநாயக்காவால் தேர்தல் தள்ளிப் போடப்படவில்லையா?

**கேள்வி:** ஆனால் எங்கள் மக்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பு பழக்கமான ஒன்றல்ல,

**பதில்:** விஜயவும் வேறு நக்ஸலைட்டுகளும் திருமதி பண்டாரநாயக்காவிடமிருந்து அதிகாரத்தைப்பறிக்கத் திட்டமிட்டிருந்தனர். நான் தேர்தலை நடத்திபிருந்தால் அவர்கள் வன்செயல்மூலம் எஸ்.எல்.எவ்.பியைக் கட்டுப்படுத்தி 50% உறுப்பினர்களை விகிதாசார முறையில் பெற்றிருப்பார்கள்.

**கேள்வி:** உங்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடிந்ததென்றால், ஏன் தேர்தலை நடத்த முடியவில்லை?

**பதில்:** எங்களால் முடிந்திருக்கும். ஆனால் அதை நடத்திபிருந்தால் விகிதாசார முறைமூலம் அவர்கள் (நக்ஸலைட்டுகள்) ஆட்சிக்கு வந்திருப்பார்கள். அதனால் நான் தேர்தல் வைப்பதா விடுவதா என்பதை மக்கள் தீர்மானிக்கும்படி விட்டேன்.

**கேள்வி:** தேர்தல்மூலம் செய்வதே உண்மையான மக்கள் தெரிவாகும்.

**பதில்:** இதுவும் மக்கள் தெரிவுதான். மக்கள் குரல் என்பது கடவுளின் குரலாகும்.

**கேள்வி:** நான் அப்போது 'ஐலண்ட்' பத்திரிகையின் ஆசிரியராய் இருந்த போது, 'சட்டரீதியாகச் சரியானவை எப்போதும் ஒழுக்க ரீதியாகச் சரியானவை அல்ல என்பதை ஜே. ஆர் கவனத்தில் கொள்ள வேண்டும்' என எழுதினேன்.

**பதில்:** இதை திருமதி பண்டாரநாயக்கா 1975 இல் தேர்தலைப் பின்போட்ட போது ஏன் எழுதவில்லை?

**கேள்வி:** 'ஐலண்ட' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதே 1981 இல் தானே?

**பதில்:** ஆ. ஓம் ஓம்.

**கேள்வி:** ஆனால்,சர்வஜன வாக்கெடுப்பு ஜே வி. பி. யைப் பாதித்தது?

**பதில்:** பொலிஸாரின் தகவல்களின்படி அவர்கள் பெரிய புரட்சிக்காகத் திட்டமிட்டிருந்தனர்.

**கேள்வி:** ஆனால் விஜயவீர ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டது, வெற்றி பெறுவதற்காகவல்ல. அதை பொதுத் தேர்தலுக்கு ஒரு களமாகப் பாவிப்பதற்கே. பொதுத் தேர்தலில் அனேக இடங்களைப் பெறலாம் என அவர் எதிர்பார்த்தார்.

**பதில்:** நான் சர்வஜன வாக்கெடுப்பைத் தீர்மானித்த போது ஜே வி.பியைப் பற்றி நினைக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

**கேள்வி:** ஏன் எல்.ரி.ரி.ஈ. யை மறந்துவிட்டீர்களா? அவர்களால் 13 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்திய ஜூலை 23, 1983 தான், உங்கள் அரசாங்கத்தின் பதவிக் காலம் முடிவடைய இருந்த காலமாகும். ஆனால் அது உங்களது சர்வஜன வாக்கெடுப்பால் தவிர்க்கப்பட்டது.

**பதில்:** சரி, இதிலிருந்து எதைத் தெளிவு படுத்த முயல்கிறீர்கள்?

**கேள்வி:** அதாவது, இப்படி உங்களுடைய சட்டங்களுக்கு ஏற்ற மாதிரி நீங்களே ஆட்டக்காரராகவும், நடுவராகவும் இருந்து செயற்படுத்துகிற உங்கள் ஜனநாயகத்தைத் தூக்கி எறியுங்கள்! இனி நாங்கள் எங்களுக்கு ஏற்றமாதிரிச் செய்வோம் என்று, தமிழ் இளைஞர்கள் கூறினார்கள்.

**பதில்:** சர்வஜன வாக்கெடுப்பை செயற்படுத்திய போது தமிழ் இளைஞர்களையும்நான் கவனத்தில் எடுக்கவில்லை.

**கேள்வி:** அப்படியானால் இது தவறென நினைக்கவில்லையா?

**பதில்:** இல்லை நான் நக்ஸலைட்டுகளை அதிகாரத்துக்கு வரவிடாமல் தடுத்தேன். □

---

பௌதிகவியலில் தலைசிறந்த நிபுணரும் பௌதிகத்தின் தாவோ, திருப்புமையப்புள்ளி, அபூர்வ கலைஞானம் முதலிய உலகளாவிய நூல்களின் ஆசிரியருமாகிய ஃபிறிற்ஜோவ் கப்ரு பெண்ணிலைவாதம் பற்றித் தெளிவான கருத்துடையவர். சமயம், விஞ்ஞானம் அனைத்தையும் தழுவிய புதிய எதிர்கால உலகநோக்கு ஒன்றை உருவாக்குவதில் முனைந்துள்ள அவரது கருத்துகள், சிந்தனையாளர் அனைவருக்கும் ஏற்புடையன ஆகும்.

**1974** இல் நான் 'பெண்ணிலைவாதம்' அல்லது (அக்கால மொழியில்) 'பெண்கள் விடுதலை' என்ற கருத்துக்கு முகம் கொடுக்கலானேன்.

# பெண்ணிலைவாதம்

ஜேர்மேன் கிறீயர் எழுதிய அருநூல் பெண் நபும்சகள் என் சிந்தனையைத் தூண்டியது. அது வெளிவந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின், அது பெருமளவு விற்பனையாகும் நூல் வரிசைக்கு உயர்ந்து, பெண்ணிலைவாதத்தின் "இரண்டாம் அலை" எனப்பட்ட புதிய, தீவிர, வியத்தகு இயக்கத்தின் அதி உரத்த குரற் பிரகடனம் என்று பாராட்டப்பட்ட காலம் அது.

கிறீயர் நான் அதுவரை கவனம் செலுத்தாத பிரச்சினைகள் நிறைந்த தனி உலகு ஒன்றை நோக்கும் வகையில் என் கண்களைத் திறந்து விட்டார். பெண்கள் விடுதலை இலட்சியம், அதன் குற்றச்சாட்டுகள் பற்றிய விபரங்களை நான் அறிந்திருந்தேன். ஆனால் கிறீயர் அவற்றுக்கு அப்பால் சென்று, நறுக்குத் தெறிக்கும் சக்தி மிக்க இலக்கிய வசன நடையில், ஆண்வழிச் சிந்தனையால் உருவான நம் கலாசாரத்தில் பெண்ணின் இயற்கை பற்றிய அடிப்படைக் கருத்துகளைச் சர்ச்சைக்குரியவை ஆக்கினார் அத்தியாயம் அத்தியாயமாக, தந்தைவழிச் சமுதாயத்தில் தம்மைப் பற்றிச் சிருட்டித்த மாதிரி உருவங்களை ஏற்று, அவற்றால் முற்றாக மூளை கழுவப்பட்ட வபரங்களை — தம் உடல், பாலியன்மை, அறிவு, உணர்வுகள், தமது பூரண பெண்மைஅனைத்தையும் ஆண் கண்களினூடாகப் பார்க்கும் அவல நிலையை – வருணித்துள்ளார். இதனால் பெண்களின் உடல்களும் ஆத்மாவும்கோணுதலுற்றன. தந்தைமைச் சகதியால் பெண் விதையடிக்கப்பட்டாள்; (ஆண்மையிழக்கச் செய்து அந்தப்புர அடிமையாக வைக்கப்பட்ட) நபும்சகன் போல அவள் பெண் நபும்சகள் (Female euaucn) ஆகிவிட்டாள்.

கிறீயரின் நூல் கோபத்தையும் உளக்கிளர்ச்சியையும் தூண்டியது. அவர், பெண்ணின் முதற்கடமை, அவளது கணவனுக்கோ பிள்ளைகளுக்கோ அன்று; தனக்குத்தான் என்று பிரகடனம் செய்தார். தன் சகோதரிகள் தம்மை விடுவித்துக்கொண்டு, பெண்ணிலைவாத வழியிற் சென்று சுய-கண்டுபிடிப்பு மூலம், தம்மை அறிதல் வேண்டும் எனத்தூண்டினார் இந்தத் தீவிர சவாலை நிறைவேற்றுவதற்குரிய வழிமுறைகள் இனிமேல் தான் வகுக்கப்படல் வேண்டும். ஓர் ஆணாகிய நானே இந்த வற்புறுத்தல்களால் தூண்டுதல் பெற்றேன்; இதனால் பெண்கள் விடுதலையே ஆணின் விடுதலைக்கும் வழி என உணரலானேன். உணர்வு நிலையின் புதிய விரிவினால் உண்டாகும் வியப்பும் மகிழ்ச்சியும் என்னுள் பூரிப்பதை உணர்ந்தேன். அதனை அந்த ஆசிரியையே தமது நூலின் தொடக்கத்தில் கூறுகிறார்: "சுதந்திரம் என்பது அச்சுறுத்துவது; அதேசமயம் உளங்கிளர்ந்தெழச் செய்வது; எது மகிழ்ச்சி தர முடியாத போராட்டமோ அது பிழையான போராட்டமே."

நான் ஜேர்மேன் கிறீயரின் நூலை வாசித்த காலத்தில் என் பெண்ணிலைவாத நண்பரான பெண்மணி லின் காம்பிள்ஸ் என்ற ஆங்கில செய்திப் படத் தயாரிப்பாளர். அவர் பெண்ணிலைவாதம் பற்றிய நூற்பரப்பை நன்கு அறிந்தவர்; பெண் விடுதலை இயக்கத்தில் உழைத்தவர். ஆனால் எமது விவாதங்கள் எப்பொழுதேனும் எதிர்ப்பு நிலையில் நிகழ்ந்தில. அவர் தமது ஆழ்ந்த நோக்குகளை என்னுடன் பகிர்ந்து கொள்வார். நாம் புதிய சிந்தனை முறைகள், புதிய மதிப்புகள், அவற்றை ஒன்றுடன் ஒன்று இணைக்கப் புதியவழிகள் பற்றி ஆராய்வோம். பெண்மை சுய அவதானிப்பு மூலம் பெறும் விடுதலைச்சக்தி குறித்து இருவரும் கிளர்ந்த உளம் பெற்றோம்.

1975 இல் நான் கலிஃபோர்னியாவுக்குச் சென்றபோது, தொடர்ந்து பெண்ணிலைவாத இலக்கியங்களை ஆராயவும், அமெரிக்க பெண் விடுதலை இயக்கத்தின் முக்கிய மத்தியஸ்தானமாகிய பேர்க்ளியில் செயல்திறன் மிக்க சேவகிகளுடன் விவாதிக்கவும் வாய்ப்புகள் நிறைந்திருந்தன. அக்கால விவாதங்களில் மனத்தில் இருப்பவை கலிஃபோர்னிய பல்கலைக்கழக பேர்க்ளி வளாகத்தில் விஞ்ஞான வரலாற்று



நிபுணராகத் திகழ்ந்த கரோலின் மேர்ச்சன்ற் உடன் நிகழ்த்தியவையாகும். அவரை நான் பல ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாவில் நிகழ்ந்த குவான்ரம் பௌதிகவியல் வரலாறு பற்றிய மாநாடு ஒன்றில் முதன் முதலாகச் சந்தித்தேன். அப்பொழுது அவர் லைப்நிற்ஸின் மொனட்டியல் பற்றிய ஆய்வுகளில் திளைத்திருந்தார் ... ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அவரை பெர்க்ளியில் கண்ட போது, அவர் தமது புதிய ஆய்

**கப்ரு**

வுகள் 17 ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தின் விஞ்ஞானப் புரட்சி பற்றிய புதிய நோக்குகளை அளித்தது மட்டுமன்றி, பெண்ணிலைவாதம், சூழலியல், எமது முழுப் பண்பாட்டுப் புனர் அமைப்பு முதலியவற்றுக்கு அதியுன்னத பங்களிப்பைச் செய்ய வல்லவை என்பது குறித்துப் பெருவியப்பில் திளைத்திருந்தார்.

இந்த ஆய்வுகள், பின்னர் இயற்கையின் சாவு என்ற நூலில் இடம்பெற்றன. பிரான்ஸிஸ் பேக்சன் விஞ்ஞானத்தின் குறிக்கோள் ஞானம் என்பது அன்று; (சுயநலத்துக்காக) புரட்டுகள் செய்வதே என்று மாற்றி வைத்தவர் என்பதை நன்கு நிரூபித்துள்ளார். அதனைப் பற்றி ஆசிரியை குறிப்பிட்டவுடன் அதன் முக்கியத்துவத்தை நான் உணர்ந்தேன். தற்கால விஞ்ஞானம் சுற்று மாற்றுகள் செய்யும் இயல்புடையது என்பதால் அதனைக் கடுமையாகக் கண்டித்த ஷூமாக்கரின் கருத்துகள் அவரைச் சில மாதங்களுக்கு முன் சந்தித்த போது, என் உள்ளத்தில் பதிந்திருந்தன.

மேர்ச்சன்ற் எனக்குத் தந்த ஆய்வுக் கட்டுரைகளில், பிரான்ஸிஸ் பேக்கன் பழைய (விஞ்ஞான) சிந்தனையின் இரு அம்சங்களுக்கு இணை பாலமாகத் திகழ்ந்தார் என்பதை, நன்கு காட்டியுள்ளார்: அவை யதார்த்த நிலைஅல்லது இயற்கையின் யாந்திரிக எண்ணக்கருவும், தந்தைமைப் பண்பாட்டில் ஆண் ஆதிக்கம், கட்டுப்பாடு ஆகியனவுமாம் பேக்கனே விஞ்ஞானத்தின் நுகர்ச்சி வழிக் கொள்கை (Empirical) அணுகுமுறை பற்றிய தெளிவான கொள்கையை வகுத்தவர்; தமது புதிய நுண் ஆய்வு முறையை உணர்ச்சி மிக்க, படுகொடூரமான சொற்களால் வற்புறுத்தியவர்.

(அடுத்த இதழில் முடியும்)

---

## இன்னும் 20,000...

படிப்படியாக இலங்கையிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டிருக்கும் இந்தியப் படையில் இன்னும் 20,000 பேர் வரை இலங்கையில் உள்ளதாக இந்திய தரப்பில் கூறப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள இவர்களும் மார்ச் மாத இறுதிக்குள் இலங்கையிலிருந்து விலகிக் கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# முஸ்லிம் கொங்கிரஸ் முகங்கொடுக்கும் பிரச்சினைகளின் இரண்டு பக்கங்கள்!

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் — இலங்கை நாட்டின் தேசிய மட்டத்தில் ஸ்ரீ. ல. மு. கொ. தன்னை மூன்றாவது ஸ்தானத்தில் நிலை நிறுத்திக் காட்டியமை ஒரு வியத்தகு சாதனை என்பதில் சந்தேகமில்லை. பேரினவாத சக்திகளின் விடாப்பிடியான நெரிசல்களுக்கு மத்தியில், ஒரு சிறுபான்மை இனம் அடையும் வெற்றி இலங்கையைப் பொறுத்தவரை ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

ஓரிரண்டு உதிரிப்பிரச்சினைகளைத்தவிர, தற்போதைய கால கட்டத்தில் முஸ்லிம் கொங்கிரஸ் முகம் கொடுத்திருக்கும் பிரதான பிரச்சினைகள் யாவற்றிலும் மூன்று சக்திகளின் பிரசன்னம் இருப்பது வெளிப்படையான ஒரு விடயம்.

1) இலங்கை அரசு.
2) தமிழர் அமைப்புகள்.
3) இந்திய அரசு.

தேர்தல் களத்தில் குதிக்க வேண்டியிருந்த ஆரம்ப காலத்தில், முஸ்லிம் கொங்கிரஸின் போக்கு குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டையும் அடியொற்றுவதாகச் சொல்லிக் கொண்டமைந்த "ஈரான் சார்புப் போக்காக" இருந்ததாயினும் தற்போது "இந்திய அரசுக்குச் சார்பாகவே" இயங்குவதாக அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் – அளவு கடந்து பெருக்கெடுத்தோடிய இனவாத அலைகள் காரணமாக முஸ்லிம் கொங்கிரஸ் கண்டுள்ள வளர்ச்சி சிலவேளைகளில் வளர்ச்சியல்லாமல் "வெறும் வீக்கமாகவும்" ஆகிவிடலாம் எனக் கருதப்படுவதால், முஸ்லிம் கொங்கிரஸின் பங்களிப்புள்ள பிரச்சினைகளின் பல்வேறுபட்ட முகங்களைச் சுட்டிக் காட்டுவது மிக அவசியமாகின்றது.

சர்வ ஜன வாக்கெடுப்பு, இந்தியப்படை வாபஸ், இனப்பிரச்சினையில் முஸ்லிம்களின் தீர்வு என்பவற்றில் ஒரு 'தெளிவான' திட்டத்தைக் கொண்டிராமல் இருப்பதும், அவசியமான வேளைகளில் அவசியமற்ற கருத்துக்களை வெளியிடுவதும் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தக் கூடியன. அத்தோடு முஸ்லிம்களின் அபிலாசையைப் பிரதிபலிப்பனவாகவும் அமைய முடியாதன.

## இந்திய சார்பு நிலைப்பாடுகள்

1987 ஜூலைப்பகுதியில் இந்திய — இலங்கை ஒப்பந்தம் வெற்றிகரமாகக் கைச்சாத்திடப்பட்டு முடிந்தாலும், துரதிர்ஷ்டவசமாக விரைவாகவே அதனை அமுல் நடாத்தக்கூடிய சூழ்நிலை மறைந்து, மாறாக ஏகப்பட்ட பிரச்சினைகள் தலைவிரித்தாடத் தொடங்கியிருந்தன. வட–கிழக்குப் பிரதேசத்தின் கட்டுப்பாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்ட இந்திய அரசுக்கு, இதனை அமுல் நடாத்திக் காட்ட வேண்டிய கௌரவப்பிரச்சினையும் மேலோங்கியிருந்தது.

அதனால் - இந்தியா தனது வல்லரசாதிக்கத்தின் வலுவினை ஓரளவுக்காவது நிரூபித்துக் காட்டுவதற்காக-தனது முதல் கட்ட நடவடிக்கையாக-மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி, மாகாண அரசுகளை இயங்கவைத்து, கடந்த 13 ஆண்டுகளாக இலங்கை அரசால் செய்ய முடியாமல் போன கைங்கரியங்களை தான் ஒரு சில மாதங்களுக்குள் செய்துகாட்டிச் சர்வதேசப் பெருமை கொள்வதற்காக, கடுமையாகப் பிரயத்தனம் செய்தது.

எனினும் இந்திய அரசினதும், அமைதிப்படையினரதும் பிரசன்னத்தை விரும்பாத மற்றுமோர் இயக்கத்தைக் கருத்திற் கொண்டு-தமிழர் அமைப்புக்கள், அரச குழுக்கள் உட்பட எந்தவொரு குழுவுமே போட்டியிட முன்வராமல் போனமை பாரிய பிரச்சினையாகிவிட்டது.

இதனால் இந்திய அரசுக்குக் கிடைக்கவிருந்த தலைகுனிவை அப்போதைய இந்திய உயர் ஸ்தானிகரான திரு. டிக்சித் நாட்கணக்காக யாழ்ப்பாணப் பகுதிக்குச் சென்று, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி, பத்திரிகைகளில் விளம்பரம் செய்து - இறுதியில் போட்டியின்றியே மாகாணசபைத் தேர்தல் நடாத்தி முடித்ததன் மூலம் - அந்தத் தலைகுனிவை இந்தியாவுக்குச் சிறிதாக்கிக் கொடுத்தார்; முற்றாக நீக்க முடியவில்லை.

கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறே போட்டியின்றி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்களேயானால், அது இந்திய அரசுக்குப் பெரிய தோல்வியாக அமைவதோடு, இவ் ஒப்பந்தத்தை இப்பகுதியிலுள்ள ஒரு குறிப்பிட்டசாரார் மாத்திரமே ஆதரிக்கின்றனர் என்பதும் நிரூபணமாகிவிடும். எனவே அதனைச் சிதறடிப்பதற்காக, வேறுவழியில்லாமல், ஸ்ரீ. ல. மு. கொங்கிரஸுடன் இந்திய அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் தொடங்கினர் என்று, அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தேர்தலுக்கான நாள் மிக நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் — முஸ்லிம் கொங்கிரஸ் இத்தேர்தலில் இனிப் போட்டியிடாது என்று நம்பிக் கொண்டிருந்த வேளையில் — இப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் முஸ்லிம் கொங்கிரஸ் திடீரென தேர்தல் களத்தில் குதித்ததையும், அதற்காக வேண்டிய சகல கோணங்களிலும் இந்தியப்படை உதவியதையும், இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக்காட்டுதல் அவசியமாகும். முஸ்லிம்களின் ஒரு கட்சி முதன்முதலாக போட்டியிட்டது என்று பெருமைப்படும் இச்சந்தர்ப்பத்தில், இக்கட்சி இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு பலியாகிக் கொண்டது என்ற உண்மையையும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## இந்தியப்படை வாபஸ்

இந்தியப்படையின் பிரசன்னத்தையும், அவர்களது அமைதிகாக்கும் முறையினையும், ஒரு குறிப்பிட்ட சாராரைத்தவிர, இலங்கையின் எல்லாத் தரப்பினருமே எதிர்த்துக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக வடக்கு, தெற்கு மாகாணம் உட்பட நாட்டில் இன்று தோன்றியிருக்கும் மிகச் சிக்கலான பிரச்சினைகளுக்கு இந்தியப்படையின் பிரசன்னமும் ஒரு முக்கிய காரணமாகும்.

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தங்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகளைச் சுமூகமாக நடாத்தி, இந்தியப்படையினர் "வட–கிழக்கில் அமைதி காக்கும் படையினராகத் தொழிற்படவில்லை" என்று நிரூபித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இதுவரை காலமும் முஸ்லிம் கொங்கிரஸ் அமைதிப் படையினர் மீது கொண்டிருந்த கொள்கையிலிருந்து சடுதியாக விலகி - "வட-கிழக்கில் சமாதானம் தோன்றும் வரை இந்தியப்படை இங்கிருத்தல் வேண்டும்" என்று நாடாளுமன்றத்தில் கூறி, தனது புதிய நிலைப்பாட்டை வெளிக்காட்டியமை, அதன் இந்திய சார்பான போக்கை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியது.

**நற்பிட்டிமுனைபளீல்**

அதாவது இந்தியா எதனைச் சாதிக்க நினைக்கின்றதோ, அதனைச் செய்யும் தொழிற்சாலையாக முஸ்லிம் கொங்கிரஸ் தொழிற்படுகின்றதா?

1985, 1986, 1987 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முஸ்லிம், தமிழ் கலவரங்களின் போது மாத்திரமன்றி, மிக அண்மையில் நடந்தேறிய சம்பவங்களிலும், இந்தியப்படையினரின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி தெரிவித்த முஸ்லிம்கொங்கிரஸ், திடீரென இப்படிக் கூறியது மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இக்கருத்தானது, வட–கிழக்கில் அமைதிப்படையினர் என்றொரு படையினர் இல்லாமல் போய்விட்டால் சமாதானமே இல்லாமல் போய்விடும் என்ற இந்தியாவின் சர்வதேசப் பிரச்சாரத்துக்கு, நல்லதொரு வாய்ப்பையும் அமைத்ததோடு அமைதிப் படையினர் சுமுகமாகவே தொழிற்படுகின்றனர் என முஸ்லிம்களின் தலைவர்களே கூறுகின்றனர் என, இந்தியா பறைசாற்றித் திரியவும் காரணமாயிற்று.

அது மட்டுமல்லாமல், பொறுப்பற்ற இக்கூற்று அமைதிப்படையினரை விரும்பாத சமூகங்களுக்கும் நாடு பூராக அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பரவிக்கிடக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில், விரிசலையும் ஏற்படுத்தக் கூடியதே. ஆகவே, பாதிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம்களைப் பயன்படுத்தியே இலங்கையில் அமைதிப் படையின் பிரசன்னத்தை நீடிக்க நினைக்கும் இந்தியாவின் போக்கை, முஸ்லிம்கொங்கிரஸ் கருத்தில் எடுக்கத் தவறிவிட்டது.

## சர்வஜன வாக்கெடுப்பு:

ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்த — தனது வல்லரசாதிக்கத்தை இலங்கையில் நிரந்தரமாக்கிக் கொள்வதானால், ஆகக்குறைந்தது நிரந்தரமாக இணைக்கப்பட்ட வட–கிழக்கு மாநிலத்தையாவது அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கடப்பாட்டை, இந்திய அரசு உணர்ந்திருக்கிறது. அதுவும் இல்லாது போகும் பட்சத்தில் தமிழ் மக்களின் நீண்ட கால – நியாயமான போராட்டத்தை, சுயலாபம் ஒன்றுக்காகத் தாரைவார்த்து –குழப்பியடித்து —, அர்த்தமற்ற தாக்கி விட்ட பழியை இந்தியா வரலாறு பூராகச் சுமக்க வேண்டி ஏற்படும் என்பதையும் அது உணர்ந்து நிற்கிறது.

தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தின் வெற்றிக்கு சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்தல் எந்தளவுக்கு முக்கியமானதாக இருக்கின்றதோ, அதே அளவிற்கு சிங்கள மக்களின் அபிலாஷையைப் பூர்த்தி செய்வதானால் சர்வஜன வாக்கெடுப்பை நடாத்திக் காட்ட வேண்டியதும், முக்கியமாக இருக்கின்றது. இந்த விவகாரம் காரணமாகத்தான் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தைகள் கூட இழுபறியாய்ப் போனது.

ஆகவே இவ் வாக்கெடுப்பு நடாத்தப்படும் என்பது இப்போதைக்கு நிச்சயமாகத் தெரிகின்றது. வெற்றியோ, தோல்வியோ முஸ்லிம்களைப் பொறுத்தவரை இதுவொரு வரலாற்றுச் சம்பவமாகும்.

வாக்கெடுப்பு விவகாரத்தில் இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகள், அதிலும் குறிப்பாக கிழக்கு வாழ் முஸ்லிம்களின் உணர்வுகள் சரிக்குச்சரியாக முஸ்லிம் கொங்கிரசைப் பின்பற்றும் என்பதற்கில்லை. இப்போது பெரும்பாலான முஸ்லிம்கள் மத்தியில் தோன்றியிருக்கும் "சந்தேகத் தன்மையின்படி, கிட்டத்தட்ட இன்னும் 10 வருடங்களின் பின்னர். இவ் வாக்கெடுப்பை நடாத்தினால் கூட இதே நிலைதான் நிலவும். அப்படியான கட்டத்தில் இவ்வாக்கெடுப்பு முஸ்லிம்களுக்கு தோல்வியையோ அல்லது வெற்றியையோ பெற்றுக் கொடுக்கும் என்ற விடயம் ஒருபக்கம் இருக்க, முஸ்லிம் கொங்கிரசுக்குப் படுதோல்வியை வாரிக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதன் பின் சில தமிழ் கட்சிகளுக்கு ஏற்பட்ட நிலையே எஞ்சிக் கிடக்கும்.

சர்வதேச மட்டத்தில் கட்சியின் செல்வாக்கை வளர்ப்பதாயின் இந்தியா போன்ற வல்லரசுகளுடனான தொடர்புகள் அவசியந்தான். எனினும், அதற்காக தன் சொந்தமக்களின் அபிலாசைகளை மறந்து செயற்பட முடியாது.

மேற்படி விடயங்களில் அக்கறை செலுத்தாத பட்சத்தில் இவற்றைச் சொல்லிக் கொண்டே இன்னுமொரு கட்சி உருவாகி, முஸ்லிம்களின் அரசியல் பலத்தைச் சின்னாபின்னமாக்கிவிடும் என்பதை கொங்கிரஸ் மறக்கக் கூடாது. ◻

## தொலைக்காட்சி — 'கலாசார அதிரடிப்படை'

மேற்கிந்திய மக்கள் மிதமிஞ்சிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதனால் பாதிப்புற்றிருக்கிறார்கள் என, ஜோர்ஜ் லமிங் என்ற மேற்கிந்திய எழுத்தாளர் கருதுகின்றார். இதனால் மக்களின வாழ்வில் எதிர் மறையான விளைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அவர் மேலும் கூறுவதாவது : அந்நிய நாட்டில் தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சிகள் எமது வாழ்வில் மேலாதிக்கம் செலுத்துவதனால் நாம் உண்ணும் உணவு, அணியும் ஆடைகள், எமது முதன்மைகள் ஆகியவை அவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கின்றன.

பொதுப்படையாக எழுத்து வாசனையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கும், தொலைக்காட்சியின் மேலாதிக்கத்திற்கும் நேரடித் தொடர்புண்டு. இளைய தலைமுறை, பல்வேறுவகையான தான்தோன்றித்தனமான வன்செயல்களில் ஈடுபடுவதற்கும் தொலைக்காட்சி ஓரளவு வழிகோலியுள்ளது. இத்தகைய வன்முறைகள் மூலம் தமது சுயத்தை வெளிப்படுத்தி உறுதிப்படுத்துவதாக, அந்தத் தலைமுறை கருதுகின்றது.

அந்நிய நாட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கரீபியன் பகுதிகளிலே வெள்ளப்பெருக்கெடுத்திருப்பதால் உருவாகியுள்ள விழுமியங்கள் குறித்து, 'லமிங்' கும் வேறு கரீபியன் அறிஞர்களும் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

பலவீனமுற்றிருக்கும் எந்த ஒரு நாட்டிலும் ஊடுருவித் தாக்கவல்ல 'கலாசார அதிரடிப் படை' தொலைக்காட்சி என, லமிங்க் வர்ணித்துள்ளார். ◻

# 'தான்' இருக்கும் இடத்தில் உண்மைக்கேது இடம்?

கந்தையா நவரேந்திரன்

சென்றவாரத் தொடர்ச்சி

கிருஷ்ணமூர்த்தியைத் தேவதூதன் என்று அழைத்த விடயத்தில் சில நிகழ்வுப் பிழைகளை கட்டுரை ஆசிரியர் விட்டிருக்கிறார். 'Order of the Star' என்ற ஸ்தாபனத்தைக் கலைத்தது பற்றியும் தேவதூதன் ஸ்தாபனத்தை ஏற்காது துறந்தது பற்றியும் ஒருவர் கேட்ட வினாவிற்கு 1947 இல் கிருஷ்ணமூர்த்தி கீழ்க்காணும் பதிலைக் கொடுக்கிறார். அந்தப் பதிலை அப்படியே வாசகர்களின் கவனத்திற்குச்சமர்ப்பிக்கின்றேன். "இவ்வினா அத்துணை முக்கியமான ஒன்றாக இல்லாத போதிலும் இதற்குப் பதிலளிக்கின்றேன். உண்மையைத் ஸ்தாபிக்க முடியுமா? உண்மையைத் ஸ்தாபனம் ஒன்றினூடாகக் கண்டுபிடிக்க முடியுமா? அனைத்து ஸ்தாபனங்களையும் தாண்டி அதற்குமேலே சென்றல்லவா உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்? இத்துணை ஆன்மீகத் ஸ்தாபனங்கள் எதற்காக இருக்கின்றன? அவை அனைத்தும் வித்தியாசமான நம்பிக்கைகளை அல்லவா அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன? நம்பிக்கைகள்தான் ஸ்தாபனத்தைத் ஸ்தாபிக்கின்றன. விளம்பரப்படுத்தவும் பரப்பவுமே ஸ்தாபனங்கள் உதவுகின்றன. உண்மையானது விளம்பரப்படுத்தவும் பரப்பவும் வேண்டியது ஒன்றா? அவற்றிற்கு ஆதனங்கள் அத்தியாவசியமாக இருப்பதால் அவை ஆதனங்களைத்தேடிப்பெறுகின்றன. பின்பு உறுப்பினர்களைச் சேர்த்தல் போன்ற வேறு பல விடயங்களிலும்ஈடுபடுகின்றன. அவர்கள் உண்மையைக் காணவே மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் உண்மையைத் தேடுதலைக் காட்டிலும் ஸ்தாபனமும் அதனால் வரும் பதவி, புகழ் போன்றவையுமே அதிமுக்கியமானவையாக இருக்கின்றன. உண்மை என்பது சுதந்திரத்திலேயே வெளிவரும். ஆனால் நம்பிக்கை இருக்குமிடத்தில் சுதந்திரம் இராது. நம்பிக்கையானது வெறுமனே தற்காப்பிற்கான அவாவே ஆகும். இத்தகைய தற்காப்பிற்கான தேவையில் ஈடுபடும் ஒருவன் என்றும் உள்ள உண்மையை என்றுமேகண்டுபிடிக்க மாட்டான்.

தேவதூதன் விடயத்தில் பதில் மிகவும் சுலபமானது. நான் அதனை என்றுமே மறுத்ததில்லை. நான் மறுத்தேனோ இல்லையா என்பது அத்துணை முக்கியமான விடயமில்லை. நான் கூறுவது உண்மையா இல்லையா என்பதே உங்களுக்கு முக்கியமானது. எனவே வெறும் அடையாளத்திற்கும் பெயருக்கும் முக்கியத்துவம் கொடுக்காதீர்கள். நான் தேவதூதனா இல்லையா என்பது நிச்சயமாக முக்கியமானதன்று. அப்படி அது முக்கியமானது ஆகுமானால் நான் கூறும் உண்மையை நழுவ விட்டுவிடுவீர்கள். ஏனெனில நீங்கள் அடையாளத்தை வைத்தே அளந்துபார்க்க முனைவீர்கள். இது வெறும் போலியானதாகும். சிலர் என்னைத் தேவதூதன் என்றும் வேறு சிலர் நான் தேவதூதன் அல்லன் என்றும் கூறுவர். இந்தக் குழம்பிய நிலையில் உங்களது நிலைதானென்ன? நான் கூறுபவற்றை உண்மையா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதோடு அதனை நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முடியுமா என்பதைப் பாருங்கள். இதுவே மிகவும் முக்கியமானது ஆகும். நான் கூறுவது அறிஞன் ஒருவனுக்கு விளங்கக் கஷ்டமாக இருக்கலாம். காரணம் அவனது மனமானது விபரீதமானபிழைகளை விடக் கூடியது. பக்தி கொண்டவனுக்கோ நான் கூறுவதை ஜீரணிப்பது கஷ்டமாக இருக்கும். தேடுதலில் ஈடுபடுபவனுக்கோ இது மிகவும் சுலபமாக விளங்கி விடும்.''

அல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) தனது Letters of Aldous Huxley என்ற நூலில் (பக்கங்கள் 917 - 918) மிகத் தெளிவாக கிருஷ்ணமூர்த்தி பற்றிக் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்: ''கிருஷ்ணமூர்த்தியினுடைய உரையாடல்கள் புத்தரின் போதனைகளுக்கு ஒப்பானவை. அவர் அத்துணை சக்தியுடனும் அத்துணைஉள்ளார்ந்த சான்று வலிமையுடனும்; மனிதனிடம் காணப்படும் அற்ப உணர்வுகளிலிருந்தும் அவன் செய்ய முனையும் எந்தவொரு தப்பியோடுதலில் இருந்தும் குருக்கள், மீட்பாளர்கள், ஆலயங்கள் ஆகியவற்றில் இருந்தும் மனிதனைத் தப்பியோடுவதற்கு ஒத்துப் போகா மறுப்பும்......'' என்று கூறி அதே நூலில் அதே பக்கத்தில் கிருஷ்ணமூர்த்தி கூறுவதை அல்டஸ் ஹக்ஸ்லி மேற்கோள் காட்டுகின்றார். ''நான் உங்களுக்குத் துக்கத்தையும் அதனை முடிவிற்குக் கொண்டு வருவதையும் சுட்டிக் காட்டுகின்றேன். துக்கத்தை முடிவிற்குக் கொண்டுவர நீங்கள் தயாராக இல்லாவிட்டால் நீங்கள் எத்தகைய குருக்கள் மீதும் ஆலயங்கள் மீதும் ஏனையவற்றின் மீதும் நம்பிக்கை வைத்திருந்தாலும் முடிவற்ற துயரத்தின் தொடர்ச்சிக்கே தயாராகின்றீர்கள்'' மனிதனை எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிப்பதே கிருஷ்ணமூர்த்தியின் ஒரே நோக்கமாகும்.



The Birmingham New-age Herald என்ற அமெரிக்கப் பத்திரிகையில் 1929-ம் ஆண்டு சித்திரை மாதம் முதலாம் திகதி வெளிவந்த செவ்வியில் கலில் கிப்ரான் கிருஷ்ணமூர்த்தியைப் பற்றிக் கூறும்போது கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: ''அவர் முதன் முதலில் எனது அரங்கத்திற்குள் நுழைந்த போது நான் எனக்குள் ''உண்மையில் அன்பின் தெய்வம் வந்ததாகவே உணர்ந்தேன்'' என்றார்.

உண்மைக்கான பாதை எதுவென்ற வினாவிற்கு விடையளிக்கும்போது கிருஷ்ணமூர்த்தி மற்றவர்களைப் போல் ஒரு பாதையையோ, நடுப்பாதையையோ, எதிர்மறைப் பாதையையோ, வேறு பாதையையோ கூறினாரிலர். பாதையென்று கூறும்போது அங்கே உட்கிடையாக ஒரு முயற்சியையோ பயிற்சியையோ தான் அது சுட்டும். எவனொருவன் முயற்சியிலிருந்து முற்றாகவிடுபடுகிறானோ எவனொருவன் அச்சம், நம்பிக்கை, எதிர்பார்ப்பு ஆகியவை இல்லாத நிலையில் எண்ணத்தால் தீண்டப்படாத புதிய நிலையைக்காண விழிப்பான ஓர் ஆயத்த நிலையில் - முயற்சியில் இருந்து விடுபட்ட நிலையில் — இருக்கின்றானோ அவனாலேதான் அளவிட முடியாததை எதிர்நோக்க முடியும்.

Talks with Sri Ramana Maharishi என்றநூலில் 192-ம் பக்கத்தில் ரமண மகரிஷிக்கும் மொரிஸ் ஃபிரெட்மனுக்கும் (Mourice Fredman) இடையே நடந்த உரையாடலின்போது கிருஷ்ணமூர்த்தியைப் பற்றிய Fredman இன் வினாவிற்கு ரமண மகரிஷிசுருக்கமாகஅதே வேளையில் அழுத்தம் திருத்தமான பதிலொன்றைக்கூறுகின்றார். அதன் மொழிபெயர்ப்பை வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். ஃபிரெட்மன்: ''கிருஷ்ணமூர்த்தி, மனிதன், 'தான்' என்றதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கூறுகின்றார். சூழ்நிலைகளால் மட்டுமே ஏற்படுத்தப்படுகின்ற பொட்டணமாகிய 'தான்' அப்பொழுது தான் கரைந்து விடுகிறது என்கிறார். இந்தத் 'தான்'க்குப் பின்னால் ஒன்றுமே இல்லை என்கின்றார். அவருடைய போதனை புத்தருடைய போதனையை வெகுவாக ஒத்திருக்கிறது''.

ரமண மகரிஷி: ''ஆம் - ஆம் வார்த்தைகளால் விபரிக்கமுடியாத அளவிற்கு'' கிருஷ்ணமூர்த்தியின் சொற்பொழிவை நியூசிலாந்து வானொலி ஒலிபரப்பத் தடை விதித்தமை குறித்து The Newzealand Herald என்ற பத்திரிகையில் மார்ச் 28 - 1934 இல் ஜோர்ஜ் பெர்னாட்ஷா கீழ்க்கண்டவாறு வன்மையாகக் கண்டிக்கின்றார்: ''அவரது சொற்பொழிவுகளைச் சகல ஆலயப் பிரிவினர்களும், வேறு மதத்தவர்களும் கேட்டுப்பயனடைகின்றனர் எனவே அவரது சொற்பொழிவை ஒலிபரப்பவிடாது தடை செய்தமை ஒரு மிகப் பெரிய அறியாமையிலான பிழையாகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவரது வியக்கத்தக்க பலதரப்பட்ட போதனைகளையும் அவரது உன்னத நிலையையும் அறியாது இருக்கிறார்கள். அவரை வெறுமனே மத நம்பிக்கையற்ற இந்தியர் என வகைப்படுத்தல் அவ் அதிகாரிகளின் அறியாமையைத் துலக்கமாகவும் வெளிப்படையாகவும் காட்டுகிறது. நியூசிலாந்து நாட்டிற்கு அவர் அறிமுகமாகும் போது அவர்களது இந்த செய்கைக்காக அவர்கள் மனம் வருந்துவர்'' என்றார்.

''We die in order to live'' என்பது ஒரு முதுமொழி. இதனையே கிருஷ்ணமூர்த்தியும் 'கணத்திற்குக் கணம் சாதல்' என்று கூறி விளக்குகின்றார். நான் என்பது தோன்றும் போதெல்லாம் இருக்காவிடில் புதியதை எம்மாற் காணவிழைய முடியாது.

ஒழுக்கக் கோட்பாடு, தர்மம் ஆகியவை இதயத்திற்கு உரியதே அன்றி மனத்திற்கு உரியது அன்று. மனமானது இவற்றைப் பேணி வளர்க்க முனையும் போது அஃது எம்மைச் சுய தற்காப்பாகவும், புறச்சூழலுக்கு எம்மை மிகப் புத்திசாலித்தனமாக மாற்றியமைக்கவும் உதவுகிறது. அச்சம் என்பது இருக்கும் போது ஒழுக்கக் கோட்பாடு எங்ஙனம் இருக்க முடியும்? அச்சம் என்பது மனதைப் பொறுத்தே அன்றி இதயத்தைப் பொறுத்தது அன்று. அச்சம் பலவடிவங்களுள் வீழ்ந்துள்ளது. அது ஒழுக்கக் கோட்பாடுகளுக்குள்ளும், கௌரவத்திற்குள்ளும், சேவை போன்ற பலவற்றின் உள்ளும் வீழ்ந்துள்ளது மனமானது அதன் செயற்பாடுகளில் இருந்து வேறுபட்டதன்று. ஆனால், அஃது தன்னைத்தானே பிரித்துக் கொண்டும், தன்னைத் தானே ஒரு தொடர்ச்சியையும் ஒரு நிரந்தரத் தன்மையையும் கொடுக்கிறது. ஒரு குழந்தை வாத்தியக் கருவி ஒன்றை வாசிக்கப் பழகுவது போல, மனமானது வாழ்க்கையை எதிர்நோக்கும் போதோ தன்னிலும் மேலான ஒன்றை அடைய முயலும் போதோ தன்னைமேலும் நிரந்தரமாகவும் மேலாதிக்கம் உடையதாகவும் செய்யும் முகமாகவே நல்லொழுக்கத்தைத் தந்திரமாகக் கடைப்பிடிக்கிறது. உண்மை வரவேண்டியதே அன்றி நாம் அதை நாடிச்செல்ல இயலாது. எனவே எங்களாற் பேணி வளர்க்கப்பட்ட ஒழுக்கமும் எம்மை அதற்கிட்டுச் செல்லாது. நாங்கள் அடைந்தது உண்மையன்று. பதிலாக அஃது எங்களுடைய அவாவின் சுய வெளிப்பாடே ஆகும். உண்மை ஒன்றிலேயே உண்மையான விடுதலை இருக்கிறது. நல்லொழுக்கம் என்பது சேகரிக்கப்பட்ட தடை அமைவுகள் ஆகாது. ஒழுக்கமானது உண்மையின் தன்னியலார்ந்த விழிப்பு நிலையும், புரிந்து கொள்ளலுமாகும். மனத்தால் புரிந்து கொள்ளல் என்பதைச் செய்ய முடியாது. ஆனால் புரிந்து கொண்டதைச் செயற்படுதத அதனால் இயலும். புரிந்து கொள்ளலுக்கு இசைவேற்பும் அடையாளம் காணுதலும் தேவை. இதனை மனம் அமைதியாகவிருக்கும் போது இதயத்தால் மட்டுமே அடைய முடியும். மன அமைதியைத் தந்திரமான கணிப்புகளின் பெறுபேறாகப் பெறமுடியாது. மனமானது தன்னுடைய முடிவற்ற பிணக்குகளின் ஊடாக அமைதியுற அவாவுறும் போது அது வேறு பல விளைவுகளை ஏற்படுத்துகிறது. இன்னதாக அல்லது இன்னவராக ஆக வேண்டும் என்ற அவா, ஆசை (அது நேரடியாகவோ, எதிர்மறையாகவோ எழுமானால்) இதயத்தின் நல்லறத்தை மறுப்பதாக முடியும். நல்லொழுக்கமானது பிணக்கோ, சாதனையோ அன்று. அது தன் முனைப்புடன் நிகழும் அவா இல்லாததின் பெறுபேறே ஆகும். பிறிதொன்றாக இருக்கவேண்டும் என்ற ஆசையில் இருந்து விடுபடும் உலைவின்மையே (TRANQUILLITY) நல்லொழுக்கம் ஆகும். இந்த உலைவின்மை இதயத்தைச் சார்ந்ததே அன்றி மனத்தைச் சார்ந்தது அன்று.

கீதையில் வரும் வாசகத்தையும் மேற் கூறப்பட்ட கிருஷ்ணமூர்த்தியின் கருத்துடன் சற்று ஒப்பு நோக்குவோம். ''இந்த உலகத்தில் பாவமோ, நோயோ, துயரோ இடுக்கணோ கிடையாது. 'பாவம்' என்று கூறுவதற்கு ஏதாவது ஒன்று உண்டென்றால் அஃது அச்சமே ஆகும்' என்கிறது கீதை.

கிறிஸ்துவிற்கு 2000 வருடங்களுக்கு முன்பு மோஸஸ் ஊடாக பத்துக் கட்டளைகளில்

(11ஆம் பக்கம் பார்க்க)

## கலைச்சாரல்

# நமது நாடகம்: எனது பார்வை

எம். ஏ. நுஃமான்

அபராஜிதா, இன்றைய நமது நாடகம் பற்றிய தனது சில அவதானிப்புகளை (திசை 12.1.1990) முன் வைத்துள்ளார். நமது நவீன நாடக முயற்சிகள் பற்றி ஒட்டுமொத்தமாக அவருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை என்பதை அவரது கட்டுரையை மூன்றுவது முறையாகவும் படித்ததில் இருந்து புரிந்து கொள்ள முடிந்தது. அமைப்பொழுங்கற்ற கருத்துக் குழப்பங்கள் நிறைந்த அவரது கட்டுரையின் சாராம்சத்தை நான் கிரகித்துக் கொண்டவகையில் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

(1) அவைக்காற்றுக் கலைக்கழகம், நாடக அரங்கக் கல்லூரி போன்ற அமைப்புகளின் நாடகங்களும், 'போராட்ட இயக்கங்கள்' முன்நின்று நடாத்திய தெருக்கூத்து, வீதி நாடடகங்களும் ஓர் ஆரம்ப கவர்ச்சியைக் கொண்டிருந்த போதிலும் இன்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவையாக, மக்களை ஆயாசம் கொள்ளவைப்பவையாக உள்ளன. ஏனெனில், இவை தேவையை ஒட்டிய அவசர முயற்சிகள்; புறவயமானவை. ஆனால் உண்மையான கலை அகவயமானதாக, ஆத்மாவோடு தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும். இன்றைய நாடகங்களில் இத்தன்மை இல்லை.

(2) இன்றைய நவீன நாடகங்கள் பண்பு அடிப்படையில் தேகப் பயிற்சிக்கு நிகரான அங்க அசைவுகளையும், எவ்வித பேதமும் இல்லாத ஒரேவித உச்சரிப்புக் கொண்ட சொற்களையும், சூத்திரதாரன், பக்கப்பாட்டுக்காரர், ஆடல் பாடல்கள் என்பனவற்றையும் கொண்டனவாகவும் கதையோ கதாபாத்திரங்களின் குணசித்திரங்களோ இல்லாதவையாகவும் காணப்படுகின்றன.

(3) பாடசாலை நாடகங்களையும் இன்றைய நவீன நாடகக்காரர்கள் சிலரே ஆக்கிரமித்துக்கொண்டார்கள். அங்கும் உருப்படியாக ஒன்றுமில்லை. மாணவர்கள் நன்கறிந்த கதைகளே தேவையற்று நீட்டப்பட்டு அவர்களையே திக்குமுக்காடவைக்கின்றன. அதுமட்டுமன்றி பெரிய பாடசாலைகளை இவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு சிறிய பாடசாலைகளின் கலை வளர்ச்சியை வேரோடு கெல்லியும் எறிந்து விடுகிறார்கள்.

(4) கூத்தை தற்கால முறைக்கு ஏற்ப மாற்றியும் புதுக்கியும் நடத்துகிறோம் என்று இவர்கள் சும்மா கூத்தடிக்கிறார்கள். மரபு நாடகங்களை மரபாக நடத்தவேண்டும். பெரிய பட்டப் படிப்புகள் ஒரு அண்ணாவியாருக்குநிகராகாது.

நமது நவீன நாடக முயற்சிகள் பற்றிய அபராஜிதாவின் இந்த நான்கு அவதானிப்புகளும் கடந்த சுமார் முப்பது ஆண்டுகால நமது நவீன நாடக இயக்க வரலாறு, வளர்ச்சி பற்றிய சரியான, நிதானமான ஒரு பார்வை இல்லாததன் விளைவு என்றே எனக்குத் தோன்றுகின்றது; அவர் சரியான கோணத்திலிருந்து நமது நாடக முயற்சிகளைப் பார்க்கவில்லை என்று தெரிகின்றது.

## 2

பிறகலை முயற்சிகளோடு ஒப்பிடுகையில் தமிழில் நாடகக் கலை குறைவளர்ச்சி நிலையில் இருக்கின்றது என்பது பொதுவாக நாம் அனைவரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. ஆயினும் கடந்த மூன்று தசாப்த காலத்தில் பரவலாக நம்மவர் மத்தியில் ஒரு நவீன நாடகப் பிரக்ஞையை ஏற்படுத்துவதில் நாம் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வகையில் அம்பலத்தாடிகள், கூத்தாடிகள், நாடக அரங்கக் கல்லூரி, அவைக்காற்றுக் கலைக்கழகம் போன்ற நாடகக் குழுக்களின் பங்களிப்பு முக்கியமானது. சுயமாகவும், மொழிபெயர்ப்பாகவும் சிறந்த நாடகங்கள் பலவற்றை இவர்கள் தயாரித்து மேடையேற்றியுள்ளார்கள். அபசுரம், கோடை, புதியதொரு வீடு, சங்காரம், விழிப்பு, சடூழியம், பொறுத்தது போதும், மண் சுமந்த மேனியர் போன்ற குறிப்பிடத்தகுந்த தமிழ் நாடகங்கள் பல நமக்குக் கிடைத்தன. கடலின் அக்கரை போவோர் (ஜே. எம். சிஞ்ச்), கண்ணாடி வார்ப்புகள் (ரென்னசி வில்லியம்ஸ்), ஒரு பாலை வீடு (காசியா லோகா), யுகதர்மம் (போர்ட்டல் பிறக்ற்), பிச்சை வேண்டாம் (அலெக்சி அர்பு செவ்), தலைவர் (அயனஸ்கோ) போன்ற சிறந்த மேலை நாடகங்கள் சில நமக்கு தமிழில் அறிமுகமாகின. தாசிசியஸ், சுந்தரலிங்கம், சுஹைர் ஹமீட், பாலேந்திரா, மௌனகுரு, சிதம்பரநாதன் போன்ற குறிப்பிடத்தகுந்த நெறியாளர்கள் சிலர் நம்மத்தியில் தோன்றினர். சினிமாப் பாணியிலிருந்து விடுபட்ட நல்ல நாடகங்களுக்கான ரசிகர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்கும் பட்டப்படிப்புக்கும் நாடகம் ஒரு கற்கை நெறியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வளவும் நமது சாதனைகள். இது பற்றி நாம் திருப்திப்படலாம். தமிழகத்தில் இந்த வளர்ச்சி நிலையை அவர்கள் இன்னும் எட்டவில்லை. நவீன நாடகம் அங்கு இன்றும் சிறு குழுக்களின் சிறுபான்மை முயற்சியாகவே உள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அபராஜிதா, மேற்குறிப்பிட்ட நமது சாதனைகளை முற்றாக நிராகரிப்பதுபோல் கருத்துரைப்பது கவலைக்குரியது. அவரைப் பொறுத்தவரை மக்கள் இப்போது இத்தகைய நவீன நாடக முயற்சிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பதிலாக அவர்கள் இத்தகைய நாடகங்களால் ஆயாசப்படுகிறார்கள். இது உண்மையல்ல. ஒரு வகையில் தற்குறிப்பேற்றம் எனலாம். உண்மை மறுவளமாகவே இருக்கின்றது. உதாரணமாக பத்து வருடங்களுக்கு முன்பு முதல் முறை மேடையேறிய 'புதிய தொரு வீடு' சமீபத்தில் மேடையேறிய போதும் ஒவ்வொரு காட்சியும் அரங்கு நிறைந்ததாகவே இருந்தது. அபராஜிதா சொல்வது போல் மக்கள் ஆயாசம் கொண்டதாகத் தெரியவில்லை.

நமது நாடக முயற்சிகள் அனைத்தும் தேவையை ஒட்டிய அவசர முயற்சிகள்; புறவயமானவை. அதனாலேயே மக்கள் இப்போது அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை என்ற கருத்தும் அபத்தமானதே. கலைகளை அகவயமானவை, புறவயமானவை என்று பிரிப்பதில் பொருள் இல்லை. எல்லாக் கலைகளும் புறவய உண்மைகளின் அகவயப் பிரதிபலிப்புகளே. கலைபற்றிய அரூபக் கோட்பாடுகள் அபராஜிதாவின் பார்வையைப் பாதித்துள்ளன. 'மெல்லிய உணர்வுகளின் வலைப் பின்னலால் புறவயத் திண்மங்களைக் கட்டியாள்வது' 'கலாரூபவியக்தி', 'ஆத்மாவோடு தொடர்பு கொண்ட கலை' போன்ற சொற்கூட்டங்களின் புகாருக்குள் இருந்து வெளி வந்தால் சிலவேளை நிலைமையை அவர் இன்னும் தெளிவாகப் பார்க்கக்கூடும். உடனடியாக அரசியல் பிரச்சினைகளை — எரிகிற பிரச்சினைகளை — பற்றிய நாடகங்களை மனங் கொண்டே நமது நவீன நாடக முயற்சிகள் எல்லாம் தேவையை ஒட்டிய அவசரப்படைப்புகள் என்று அபராஜிதா குறிப்பிடுகிறார் என்று நினைக்கின்றேன். ஆனால் நமது நாடகங்கள் எல்லாம் அத்தகைய பிரச்சினைகளைப் பற்றியவை மட்டுமல்ல என்பது வெளிப்படை. 'மண் சுமந்த மேனியர்' அத்தகையது என்றால் 'புதியதொரு வீடு' அதிலிருந்து வேறுபட்டது என்பதை அவர் கருத்தில் கொள்ளவில்லை. எந்த ஒரு நாடகமும் ஏதாவது ஒரு அன்றாட மனிதப் பிரச்சினையுடன் — தேவையுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ உறவு கொண்டிராவிட்டால் அது தன் கலைப்பாதிப்பை இழந்து விடும் என்ற பிறிதொரு முக்கிய உண்மையையும் அவர் கருத்தில் கொள்ளவில்லை.

இன்றைய நவீன நாடகங்களின் பண்புகள் என இவர் பட்டியல் படுத்தி இருப்பவை இந் நாடக வடிவங்களைக் கொச்சைப்படுத்தும் நோக்கில் அமைந்தவையாகும். சூத்திரதாரனும் பக்கப் பாட்டுக்காரர்களும் நாடகங்களின் தன்மைகளுக்கேற்ப இடம்பெறுபவர்கள். 'கோடை' போன்ற யதார்த்த நாடகங்களுக்கு இவர்கள் தேவையில்லை 'மண் சுமந்த மேனியர்' போன்ற மோடி நாடகங்களுக்கு இவை தேவைப்படலாம். கதையும், கதாபாத்திர குணசித்திரங்களும் எல்லாவகை நாடகங்களுக்கும் இன்றியமையாதவை அல்ல என்பதும் நாம் அறிந்ததே. "இவர்களின் நாடகப் பாணி பரவாத, அறியப்படாத இடங்களில் இவர்கள் முயற்சி சிறந்த பயனைத் தர மாட்டாது" என்றும் அபராஜிதா கூறுகிறார். இது பார்வையாளரின் புத்திசாதுரியத்தைக் குறைத்து மதிப்பிடுவதன் விளைவாகும். நவீன நாடக உத்திகள் எவையும் செப்படி வித்தைகள் அல்ல. மக்கள் நாம் நினைப்பதுபோல் மூடர்களும் அல்லர். நான் அறிந்தவரை 'மண் சுமந்த மேனி'யரும் அதையொத்த வேறுபல நாடகங்களும் கிராமப் புறங்களில் நவீன நாடக முயற்சிகளுக்கு முற்றிலும் பழக்கப்படாத பார்வையாளர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. "இது சனங்களுக்கு விளங்காது" என்ற உயர்வுச் சிக்கலிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

## 3

பாடசாலை நாடகங்கள் பற்றிய அபராஜிதாவின் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் நியாயமற்றவை. சமீபகாலம்வரை— குழந்தை சண்முகலிங்கம், மௌனகுரு, சிதம்பரநாதன் போன்ற நவீன நாடகக்காரர்கள் இத்துறையில் நுழையும் வரை - நமக்கு சிறுவர் நாடகம் (Children theatre) என்று ஒரு துறையே இருக்கவில்லை பாடசாலைகளில் நாடகம் என்று நடிக்கப்பட்டதெல்லாம் பெரும்பாலும் பெரியவர்களுக்கான புராண, இதிகாசக் கதைகளே, மாணவர்கள் கண்ணனாகவும், ராமனாகவும், சீதையாகவும் வேடம் போட்டு நடித்தார்கள். குழந்தைகளின் மனஉலகு, கற்பனை வளம், கலையுணர்வு என்பன கருத்தில் கொள்ளப்படவேயில்லை. சண்முகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாப்பா' இத்துறையில் ஒரு திருப்பம், ஒரு பாய்ச்சல் என்று சொல்லலாம். அதன் பிறகுதான் மற்றவர்கள் இதில் ஈடுபடத் தொடங்கினார்கள். பெரிய பாடசாலைகள் சில இவர்களைப் பயன்படுத்தி சிறுவர் நாடகங்களைத் தயாரித்து இத்துறையின் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அபராஜிதா இந்த உண்மையை மனங்கொள்ளவேயில்லை. போட்டியில் தோல்வியுற்ற யாரோ ஒரு ஆசிரியரின் மனக்குறையை ஒப்புதலோடு வழிமொழிந்திருப்பது விசனத்திற்குரியது. சிறிய பாடசாலைகளுக்கும் இவர்களின் உதவி கிடைக்கவேண்டும்; சிறிய பாடசாலைகளும் இவர்களின் பாணியைப் பின்பற்றி சிறுவர் நாடகங்களை வளர்க்க முயவ வேண்டும் என்றே நாம் எதிர்பார்ப்போம், சிறுவர் நாடகங்களைப் பெரியவர்களின் கண்ணோட்டத்திலிருந்து மதிப்பிட முடியாது. தன் பக்கத்தில் இருந்து நாடகம் பார்த்த ஒரு பெரியவரின் கருத்தாக (எங்களுக்கு என்ன என்ன Sunday mass ஆ நடத்துகினம்) அவர் கூறுவது இத்தகைய ஒரு மதிப்பீடுதான். சிறுவர் நாடகம் சிறுவர்களுக்கே உரியது. அதன் பார்வையாளர்கள் சிறுவர்கள் தான். சிறுவர்கள் அதை எவ்வாறு உள்வாங்குகிறார்கள், அவர்களின் கலைபுணர்வு வளர்ச்சிக்கு அது எவ்வாறு உதவுகின்றது என்பதுதான் முக்கியம். "சிறுவர்களின் நாடக ஈடுபாடும், ஒன்றிப்பும், ஆர்வமும் சிறப்பாக இருந்தன" என அபராஜிதாவே ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார். ஆனால் அதற்கு முரண்பட அடுத்தவரியில் அவரே மாணவர்கள் நன்கறிந்த கதைகள்கூட தேவையற்று நீட்டப்பட்டு அவர்களைத் திக்குமுக்காட வைத்தன" என்றும் கூறுகிறார். இரண்டாவது கருத்து அபராஜிதா என்ற பெரியவரின் கண்ணோட்டத்தில் சிறுவர் நாடகத்தை நோக்கியதன் விளைவாக இருக்கலாம்.

## 4

மரபுவழி நாடகங்களை - கூத்துக்களை - நவீனப்படுத்துவது பற்றி அபராஜிதாவின் சரியான கருத்துக்கள் எவை என்று தெரியவில்லை. இவர் பார்த்த வடமோடி நாடகம் (அது எது என்று அவர் குறிப்பிடவில்லை) இவருக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த உழைப்பாளிக்கு ஏமாற்றமாக இருந்ததாம். தன்னுடைய கருத்தைக் கூறுவதற்கு இடையில் பாவம் ஓர் உழைப்பாளி எதற்கு! 'மரபு நாடகத்தை மரபாக நடத்த வேண்டும்' (அப்படியென்றால் விடியவிடிய கூத்துப்போட வேண்டுமா?) வித்தியானந்தன் செய்தது போல் ஒரு அண்ணாவியாரைப் பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். "அப்பத்தான் எங்கள் கூத்துபற்றிய நுணுக்கங்கள் கலையாமல் இருக்கும்" (யாழ்ப்பாணத்தவரான வித்திக்கு வடமோடி பற்றி நேரடிப் பரிச்சயம் இல்லை. அவருக்கு அண்ணாவியாரின் உதவி தேவைதான். ஆனால் கூத்துக்குள்ளேயே கிடந்து வளர்ந்த மௌனகுரு போன்ற ஒருவருக்கும் அண்ணாவியார் எப்போதும் தேவைதானா?), 'பெண்பாத்திரம் சேலை கட்டியிருந்தாலும் கட்டாயம் கையில் ஒரு கைலேஞ்சி கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அது ஆண்தான்". (இனி மௌனகுரு போன்றவர்கள் பெண்பாத்திரங்களுக்குச் சேலைகட்ட மறந்தாலும் கையில் ஒரு கைலேஞ்சி கொடுத்துவிட்டால் போதும்), அபராஜிதாவின் இத்தகைய மேலோட்டமான கூற்றுக்கள் மரபுவழிக் கூத்துக்களை நவீனப்படுத்துவது பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு ஆகாது.

## 5

நவீன நாடகம் பற்றிய அபராஜிதாவின் அவதானிப்புகள் தவறானவையென்று நான் சொல்லும் போது நமது நாடகங்கள் குறைகள் அற்றவை, முழுநிறைவானவை என்று நான் கருதுவதாகப் பொருள் கொள்ளக்கூடாது. அபராஜிதாவின் கருத்துக்கள் சமீபகாலத்தில் ஒரே பாணியிலான சில நாடகங்களை அவர் பார்க்க நேர்ந்ததனால் ஏற்பட்ட அதிருப்தியின் விளைவாகும் என்று நினைக்கிறேன். இத்தகைய அதிருப்தி இன்று வேறு சிலரிடமும் காணப்படுகின்றது — நான் உட்பட. எழுபதுகளில் - ஏன் எண்பதுகளின்

(11ஆம் பக்கம் பார்க்க)

## கனவு.....

குளிர்ந்த ஊற்றருகில்
என்னிதயம் இளைப்பாறுகிறது.
(சூன்யச் சிலந்தியே,
உன்
இழைகளால் அதைநிரப்பு.)
ஊற்றுநீர் அதற்குத்
தன் பாடல்களை இசைத்தது.
(சூன்யச் சிலந்தியே,
உன்
இழைகளால் அதைநிரப்பு.)
விழிப்புற்ற என் இதயம்
தனது காதலை இசைக்கிறது.
(மௌனச் சிலந்தியே,
உன்
மறைபொருளை நெய்.)
ஊற்றுநீர் துக்கமாய்
உற்றுக் கேட்டது.
(மௌனச் சிலந்தியே,
உன்
மறைபொருளை நெய்.)
குளிர்ந்த ஊற்றினுள்
என் இதயம் வீழ்கிறது.
(வெள்ளைக் கரங்கள்,
வெகுதொலைவில்,
நீரினை நிறுத்தியது.)
களிப்புடன் இசைத்தபடி அதனைத்
தண்ணீர், எடுத்துச் சென்றது.

வெள்ளைக் கரங்கள், வெகுதொலைவில்;
தணணீரில் ஒன்றுமே
எஞ்சி இருக்கவில்லை!

ஸ்பானிய மொழியில்: கார்ஸியா லோர்கா
ஆங்கிலம் வழியாகத் தமிழில்: அ. யேசுராசா

## தரவுகள்

இருப்பு
ஒரு கணித
தேற்றம் மாதிரி.

தேற்றத்தை நிறுவ
தரவுகள்
தேடி அலைகின்றோம்;

தரவுகள்
எல்லாம்
எங்கோ தொலைவில்...

கண் டெடுத்த
தரவுகளும்
சிலந்திச் சிக்கலில்

இருந்தும்...
இருளில் இருந்து,
பாலையில் இருந்து,
தேடுகின்றோம்.

வைகறை வெண்பனியில்,
பொற்கிளியின் பாடலில்,
அம்மாவின் தாலாட்டில்,
காதலியின் முத்தத்தில்,
கலையாகிய இருப்பில்,
தியான ஆழத்தில்;

இன்னும் —
கடலில், மலையில்,
வயலில், வானத்தில்,
ஆற்றில், பூங்காற்றில்,

இன்னும்தான், இன்னும்தான் —
இரத்தப் பிரளயத்தில,
துப்பாக்கிச் சப்த்தத்தில்,
தேடுகின்றோம்;

இருப்பை நிறுவ
தரவுகள்
தேடித் தேடியே
போராட்டக் காரராகினோம்;

இப்போ —
போராட்டமே எங்கள்
இருப்பாகிப் போனதே ...

— ஈழக்கவி □

# தூவானம்

○ ஒரு 'வகைமாதிரி'ப் பாத்திரம்!

அண்மையில் வெளிவரத் தொடங்கிய சஞ்சிகையொன்றில், இலக்கியா என்ற பெயரில் ஒரு 'குட்டி எழுத்தாளர்' குறிப்புகளை எழுதி வருகிறார். பன்றி பல குட்டிகளை ஈனுவது போல் சிறுகதைகள், குறுநாவல், நாவல் எனப் பலவற்றை நீண்டகாலமாக எழுதி வருவதால் 'ஆரம்பமல்ல முடிவுதான்' என நினைக்கும்படியாக, அவாது 'முதிரா உள்ளமே' அவற்றில் வெளிப்படுவதால், இன்னமும் 'குட்டி எழுத்தாளராக'த்தான் அவர் இருக்கிறார்.

நிலாம்பரன்

ஏனைய எழுத்தாளரைப் பற்றி எழுதுகையில் 'சதாகாலமும் ஒருவர் மற்றவரை அவதூறு சொல்லிக் கொண்டு உள்ளனர்'; 'கோமாளித்தனம்'; 'வெறும் வரட்டுத்தனம்' என்று இவர் அடிக்கடி குறிப்பிடுகிறார். ஆனால், இவரது குறிப்புகளிலும் இவைதான் காணக்கிடைக்கின்றன. அரைவேக்காட்டுத் தன்மையும் முரண்பாடுகளும் கொண்டவையாய் அமைந்து, பிரக்ஞை உள்ள எந்த வாசகனிடத்தும் கேலிச்சிரிப்பைத் தோன்றச் செய்பவை,இக்குறிப்புகள். தன்னை யார்யாரோ "எழுத்தாளனென்று" இன்னமும் அங்கீகரிக்கவில்லையாம் (?!) என்ற எரிச்சலும், இவரிடம் இருக்கிறது; அந்த எரிச்சல், ஒருவித வக்கரிப்புடனும் முதிராத்தனத்துடனும் அடிக்கடி எழுத்தில் வெளிப்படுகிறது.

ஈழத்தின் நல்ல எழுத்தாளர்களில் இருவரான க. சட்டநாதன், உமாவரதராஜன் ஆகியோரின் சிறுகதைகளின் சில பகுதிகளைப் பிரித்தெடுத்துக் குறிப்பிட்டு, அவர்களை ஆபாச எழுத்தாளர்கள் என்ற மாதிரிச் சித்திரிக்கவும் இரண்டு இதழ்களில் இவர் முனைந்துள்ளார்; பரிதாபகரமானதொரு முயற்சி.

நமது 'குட்டி எழுத்தாளரின்' பார்வையிலேதான் கோளாறு இருக்கிறதே தவிர, அந்த எழுத்தாளர்களில் அல்ல. பாலியல் மன உறுத்தலினால் (sexual obsession) இவர் அவதிப்படுகிறாரென்றால், பொருத்தமான உளவியற் சிகிச்சையே அதற்குப் பரிகாரமாக அமைய முடியும்.

இரண்டு தடவைகளில்,வலுச் சண்டைக்கு இழுக்கும் தன்மையில், நீலாம்பரனைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். சிறுசஞ்சிகைகளின் தன்மை,பணிபற்றிய எனது கருத்துக்கள் 'தூவானத்'தில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. ஆனால், அவற்றை அவரால் சரியாகப் புரிந்து கொள்ளமுடியவில்லை! பரவாயில்லை. எனது கருத்தையோ வேறு யாருடையவும் கருத்தையோ, சரியாக மேற்கோள் காட்டும் திறனையாவது அவர் வளர்த்துக்கொள்ளக் கூடாதா? தப்புத்தப்பாக மேற்கோள் காட்டுகிறாரே !!

திசையில் ஆசிரியர் குழு வென ஒன்று இல்லை. ஒரேயொரு ஆசிரியர் மட்டுமே மு. பொன்னம்பலம் — இருக்கிறார். திசையின் பல இதழ்களில் அவரது பெயர் தொடர்ந்து வெளியிடப்பட்டிருக்கிறது ஏனைய பத்திரிகைகளையும் போல், 'திசை'யில் வெளியாகும் விடயங்களுக்கும் ஆசிரியரே பொறுப்பு. இந்த எளிய உண்மைகூட நமது 'குட்டி எழுத்தாளரு'க்குத் தெரியவில்லையே! இதனாலேதான் போலும் நீலாம்பரனின் தலையில் சில பொறுப்புகளைச் சுமத்தி — ஏதோ சில 'இலக்கியச் சதி நடவடிக்கைகளில்' (?!!) நான் ஈடுபட்டது போல் — அவதூறு சொல்கிறார் இதை இவரது கோமாளித்தனத்தின் உச்சமெனச், சொல்லலாமா?

நேரிற் சந்திக்கையில் தனது அபத்தக் கருத்துகளை யாரும் சுட்டிக் கேள்வியெழுப்பும் வேளைகளில்,அசடு வழிய மௌனத்தைக் கடைப்பிடித்துவிட்டு, ஒட்டிக் கொண்டுள்ள சஞ்சிகையில் புனைபெயரில் மறைந்து கொண்டு 'குத்தல்களை' எழுதும் இவரது "வீரமும்", கேலிக்குரியதாய்த்தான் இருக்கிறது!

ஒரு விதத்தில், ஈழத்து இலக்கிய உலகின் ஒரு 'வகைமாதிரிப்' பாத்திரமாகவும் இவரைக் கொள்ளலாம் அல்லவா? □

## மனிதம்

திசை எட்டும்
பார்வையைப் பாய்ச்சுகிறேன்.
எங்கும் நோக்கினும்
நீக்கமற நிறைந்த
மனிதக் கூட்டம்.

கூட்டத்தின்
மத்தியில்
மனிதத்தைத் தேடுகிறேன்.
மானிடன்
மனிதத்தைத் —
தொலைத்தானோ?
அல்லது
மனிதத்தையும்
மாய்த்தானோ?
மானிடம் என்ன
வெறும் —
மரக்கூட்டமோ?

இந்த —
மனிதக் காட்டின் மத்தியில்
ஒரு
பச்சை மரத்தைத்
தேடுகிறேன்.
எல்லாமே
பட்டமரங்கள் தானா?

பட்டமரத்தின்
வேர்களுக்கு
பால்வார்த்த
நிலை தானே
எங்கள்
எதிர் பார்ப்புகள்?

பச்சையத்தை
இழந்து போன
பட்டமரங்களே!
உங்களை
பசளையாக்கிக் கொண்டு
விருட்சமாக எழ
சில விதைகள்
நிலத்தாயின்
கருவறைக்குள்.

— சண் □

## சோகத்தை நேசியுங்கள்

அன்றைய
இதே
வானத்தின் கீழ்
இன்றும் நான்.....
அன்றைய
இதே
பூமியின் மேல்
இன்றும் நான் ...

ஆனல்—

அன்றைய
சந்தோஷ
நுரைகளைத்தான்
அள்ளமுடியவில்லை......

நெஞ்சுள்
முளைத்து, தொண்டையினைத்
தாண்டி வரும்
சுத்தமான வார்த்தைகள்
ஏன்
வாய் வரப்புகளிலிருந்து
வழியவில்லை?

இப்போதும்
நான்—
நானுகத்தான்
சிந்திக்கிறேன்.
ஆனல்,
நான்
நானென உச்சரிப்பதில்லை.

காற்றுக்குக் கூட
இங்கே
கண்கள் தேவை:
முட்டிக் கொள்ளாமல்
செல்ல......

உதடுகளுக்கெல்லாம்
இங்கே
புதிய உதடுகள் தேவை
புனிதத்தைப்
பேச ...

ஓ!
எனது தேசம்
மிக மிக
அழகானது —
ரத்தம் கசிந்த
நிலையில்
பாதையில் கிடக்கும்
ஒரு
தேசாபிமானியின்
சடலத்தைப் போல .....

என்னைப் போல்
எல்லோரும்
நேசிக்கப்பழகுங்கள்
சோகத்தை.... !

— வவுனியா திலீபன் □

## பறக்க ஒரு பட்டம்

இது ...
ஒரு கௌரவ நாடகம்

இதுவரை காலமும்
இருட்டில் இருந்த
என்னை
வெளியே கொண்டுவர
வேஷமிட்ட எனக்கு
ஒரு அரங்கேற்றம்

புத்தகக் குறிப்பில்
புழுதி குடித்து
முச்சுத் திணறி
முழுவதையும் கொட்டிவிட்டு
நிர்வாணமாய் நிற்கும் எனக்கு
ஒரு பொன்னாடை போர்த்து
விழா!

பாடக்குறிப்பின்
சுமை தாங்க முடியாமல்
முள்ளந் தண்டுடைந்து
முதுகுகூனி
நிமிர்ந்து நடக்க முடியாமல்
இருக்கும் எனக்கு,
பறப்பதற்கு
ஒரு 'பட்டம்' அளிப்பு விழா!

— வெ. மனே □

# விடுதலை செய்! விடுதலை செய்! மண்டெலாவை விடுதலை செய்!

27 ஆண்டுகளாகச் சிறை வைக்கப்பட்டிருந்த, 'ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ்' தலைவர் நெல்சன் மண்டெலா அவர்கள் சென்ற 11ஆம் திகதி மாலை விடுதலை செய்யப்பட்டார்.

அதையொட்டி, புகழ்பெற்ற இந்த மலையாள நாடகத்தை எமது வாசகருக்குத் தருகிறோம்.

கோரஸ்

(பின்னணியில்)

விடுதலை செய்!
விடுதலை செய்!
நெல்சன்
மண்டெலாவை
விடுதலை செய்
ப்ரூம்லே ப்ரூம்லே
ப்ரூம்லே பூம்.
ப்ரூம்லே ப்ரூம்லே
ப்ரூம்லே பூம்.
விடுதலை செய்!
விடுதலை செய்!

நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்! ப்ரூம்லே ப்ரூம்லே ப்ரூம்லே பூம், விடுதலை செய்! விடுதலை செய்! நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்!

இந்த வரிகள் திரும்பத் திரும்ப முழங்கப்பட்டு, முழக்கம் உச்ச ஸ்தாயியை எட்டியதும் திரைமெல்ல உயருகிறது. சுழல் விளக்கு (சைக்ளோரமா) மட்டும் காட்சி தருகிறது. மேடையின் பின்புற மையத்தில் பார்வையாளர்களுக்கு முதுகைக் காட்டியவாறு ஒரு நாற்காலியின் மீது ஏறி நின்று கொண்டிருக்கிறான் போத்தா. போத்தா தனது வலது கையில் ஒரு கைத்துப்பாக்கியை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறான். பின்னணியில் பாட்டுச் சத்தம் தூர தூரமாகச் சென்று மறைகிறது. அதைத் தொடர்ந்து போத்தாவின் குரல்: ஒன், டூ, த்ரீ!

அதே தாளத்தில் காலடிச் சத்தம் கேட்குமாறு இரண்டு ராணுவச்சிப்பாய்கள் மேடையின் இருபுறமிருந்தும் மேடைக்கு வருகின்றனர். கையில் துப்பாக்கிகளை ஏந்திக் கொண்டு, பாட்டின் வரிகளை திரும்பத் திரும்பப் பாடியவாறு போத்தாவின் இருபக்கமும் நின்ற வண்ணம் நடனம் ஆடுகின்றனர். பாட்டு தொடர்கிறது.

போத்தா: ஷூட் லெப்ட்,
ஷூட் ரைட்,
ஷூட் ரைட்,
ஷூட் லெப்ட்,
ஷூட் தி லெப்ட்,
ஷூட் தி ரைட்,
ஷூட் தி லெப்ட்,
ஷூட் தி லெப்ட்,
(திரும்பத் திரும்பக் கூறுகிறான்).

மிகவும் அழுத்தமான ஒரு நிலையில் போத்தா தன் காலடி வைப்பை நிறுத்துகிறான்.

போத்தா: (கத்துகிறான்)
ஷூட் த ப்ளாக்ஸ்
ஷூட் த ரெட்ஸ்.

போத்தாவும், இராணுவச் சிப்பாய்களும் பார்வையாளர்களை நோக்கியவாறு துப்பாக்கிகளை நீட்டிய வண்ணம் முன்னேறி அழுத்தமாக நிற்கின்றனர்.

(அமைதி)

பின்னணியில் வெடிகுண்டு ஓசை. பெண்களும் குழந்தைகளும் அலறி அடித்து அழும் சத்தம். கூட்டங் கூட்டமாக மக்கள் அழும் அவல ஒலி. (பத்து அல்லது பதினைந்து விநாடிகளுக்கு இவை நீடிக்கின்றன.)

போத்தா நாற்காலியில் போய் அமர்கின்றான். சிப்பாய்கள் தலைகுனிந்து அடிமைகளைப் போல நாற்காலியின் நான்கு கால்கள் அருகி

மலையாளத்தில்: வி. எம். இராமச்சந்திரன்
தமிழில்: கே. எம். வேணுகோபால்

'டு' என்று சொல்லும் போது பார்வையாளர்களைப் பார்க்கிறான். 'த்ரீ' என்று சொல்லும் போது நாற்காலியிலிருந்து குதிக்கிறான். (சுழல் விளக்கு மங்குகிறது. அரங்கில் வெளிச்சம் மெல்ல மெல்ல அதிகமாகிறது.)

போத்தா பேய்த்தனமான சிரிப்புடன் நடு மேடைக்கு வருகிறான். (மேற்கத்திய நடனத்தின் அசிங்கமான அசைவுகளுடன்).

கைத்துப்பாக்கியைப் பார்வையாளர்களை நோக்கி நீட்டிய வண்ணம், மேலை நாட்டு கொடூர நடனத்தின் காலசைவுகளை அழுத்தமாக வைத்துப் பாட்டுப் பாடிக் கொண்டே நடக்கிறான்.

போத்தா: ஷூட் ஷூட் ஷூட்
ஷூட் ஷூட் ஷூட்
(திரும்பத் திரும்பக் கூறுகிறான்).

லும் ஒவ்வொருவராக வந்து, தலைகுனிந்தவாறே முழந்தாளிட்டு அமர்கின்றனர். அழுகைக் குரல்களுக்கிடையில் நாற்காலியின் கால்களை ஆளுக்கொன்றாகப் பிடித்துக் கொண்டு போத்தாவை சிப்பாய்கள் மெல்ல மெல்ல உயர்த்தி, தங்கள் தலைக்கு மேல் கொண்டு போகின்றனர். போத்தா பேய்ச் சிரிப்புடன், ஹிட்லர் பாணியில் பார்வையாளர்களை வாழ்த்துகிறான்.

(அழுகைக் குரல் திடீரென அடங்குகிறது. விடுதலை செய்! விடுதலை செய்! நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்! என்னும் குரல்கள் விண்ணை முட்டும் வண்ணம் ஒலிக்கின்றன).

போத்தாவின் முகபாவம் மாறுகிறது. நாற்காலி கொஞ்சம் கொஞ்சமாக தாழ்கிறது. சிப்பாய்கள் துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டு சத்தம் கேட்கிற திசை நோக்கிப் பாய்கின்றனர். (வெளிச்சம் கொஞ்சம் மறைகின்றது).

மேடையில் போத்தா மட்டும் நிற்கையில், பின்னணியில் துப்பாக்கியால் சுடும் சத்தம் தொடர்ந்து கேட்கிறது. குண்டடிபட்டு அலறுதல், விடுதலை செய்! விடுதலை செய்! நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்!" – எனும் முழக்கங்கள், பெண்களின் தீனமான அழுகை ஒலிகள் ஆகியன கலந்த கலவையான சப்தம் பின்னணியில் ஒலிக்கிறது. (பத்து அல்லது பதினைந்து விநாடிகள் நீடிக்கிறது.) அமைதி (ஐந்து விநாடிகள்)

திடீரென போத்தாவின் உரத்த பரிகாசச் சிரிப்பு. அந்தச் சிரிப்பின் தொடர்ச்சி போல தொலைபேசி மணி அடிக்கிறது.

போத்தா: (உரக்க) எஸ்.
(சிப்பாய் பெரிய வடிவத்திலுள்ள டெலிபோன் ரிசீவரை எடுத்துக் கொண்டு வருகின்றான். போத்தாவின் காதருகே ரிசீவரைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான்.

போத்தா: ஹலோ...போத்தா ஹியர் எஸ்...தென்னாபிரிக்கா தான். ஆமாம்... நான் தான் ...ஓ! யார்? ...... வைட் ஹவுஸ்? வெள்ளை மாளிகையா! (மகிழ்ச்சி பரவ) ம் ரீகன் ... ஓ! ரொனால்டு ... ரீ ... கன்.

(திடீரென நாற்காலியிலிருந்து எழுந்து கொள்கிறான்; நடக்கிறான். நடக்கும்போது சிப்பாயும் அவன் கூடவே நடை பயிலுகிறான்.)

போத்தா: ஆமாம். கேள்விப் பட்டேன். பிரமாதம் போங்கள். என்ன இருந்தாலும் அமெரிக்கக் கப்பற் படை என்றால், அமெரிக்கக் கப்பற் படைதான். ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இல்லை ... இல்லை ... உங்கள் குறி எப்போதுமே தப்புவது கிடையாது. ஓ ...ரீகன்! ஒரே குண்டு வீச்சுக்கு 290- ஆ ... க்ரேட்! ம் ... நீங்கள் வருத்தம் தெரிவித்து அறிக்கை விட்டீர்களே அதுசரிதான். நீங்கள் அப்படி செய்தது எனக்கு ரொம்பவும் பிடித்தது .. கிளாசிக்! அப்புறம் நமது சகோதரி மாகி தாட்சர் கருத்து தெரிவித்திருந்தார்களே கவனித்தீர்களா ரீகன்? "ஏதோ கொஞ்சம் பேர் உயிர் இழந்தனர் என்பதில் வருத்தம் நமக்குண்டு என்றாலும், அமெரிக்கா தற்காப்புக்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமையைப் படைத்துள்ளது" என்று ஹ! ஹ! ஹ ..! எஃகு போன்ற உறுதி கொண்ட ஒரு பெண்மணி அவர். ஓ!

(தனக்குள்ளாக) ரீ .. கன், அப்புறம் மாகி, ஓ ... யூ ... டு

கறுப்பு நாய்கள் ஒவ்வொன்றிற்கும் சவப் பெட்டிகளை நான் உண்டாக்குவேன்.

ஓ ! ரீ ... கன், ஓ ! மாகி .. வெளிச்சம் மெல்ல மங்குகிறது.

ரிசீவரை சிப்பாயின் கையிலிருந்து பற்றிக் கொண்டு, (ரிசீவரை) கட்டியணைக்க முயன்றவாறு ... ஓ ! ரீ ... கன்

## மலையாள நாடகம்

ஓ மாக்கி ...
என்று திரும்பத்திரும்ப கனவில் வருவது போல் மந்தரிக்கிறான்.

(மேடையில் இருள் பரவுகிறது.)

அசரீரி : (தொடங்கும் போது சுழல் விளக்கு வாயிலாக ஒளி பரவுகிறது. ஒரு பெண் பார்வையாளர்களை நோக்கி கையை நீட்டிக் கொண்டு நிற்கிற தோற்றம்.)

விடுதலைக்கான பாதை — அது மிகவும் தொலைவிலுள்ளது. எனது தோழர்களே ! நமது பொறுமையின்மை அதன் நீளத்தை ஓர் அங்குலம்கூட குறைக்காது. நமது இதயங்கள் கோபத்தால் வெடித்துச் சிதறுகின்றன. அது நாம் அறிந்ததே.

நமக்குத் தெரியும் — நமது மூளை பழிவாங்கும் எண்ணத்தால் தீக்கனலாய் கனன்று கொண்டிருக்கிறது என்று.

அவை நீங்களும் நானும் பின்பற்றவேண்டிய மைல் கற்கள். துயரமும் தூரமும் நிறைந்த சுதந்திரத்தின் பாதையில் இருக்கிற சிவந்த காலடிச் சுவடுகள் —

(மேடையில் மெல்ல மெல்ல வெளிச்சம் அதிகமாகிறது. போலின் மொலாய்ஸ், வயது 50. வருகிறார்.)

போலின் மொலாய்ஸ் : (பார்வையாளர்களைப் பார்த்தவாறு)

நான் அவர்களை யாசித்துக் கேட்டேன்; 'கடைசியாக நான் அவனை ஒரு முறை பார்த்துவிடுகிறேனே' என்று. அவன் என் மகன் என்று இறைஞ்சிக் கேட்டும்கூட அவர்கள் அனுமதிக்கவில்லை. ஒரு சவப் பெட்டியைத் தான் அவர்கள் எனக்குப் பார்க்கத் தந்தார்கள்.

(வெளிச்சம் மங்குகிறது)

அசரீரி : அம்மா ! எனது ரத்தம் ஒரு பெருமழையைப் போன்று பெய்துகொண்டேயிருக்கும். ஒவ்வொரு மழைத் துளியும் எதிரியின் நெஞ்சில் ஊடுருவிச் செல்கிற நெருப்புக் கோளமாக மாறுவது திண்ணம். என்னுடைய கழுத்தில் கொலைக் கயிறு இறுகிக் கொண்டு வருகிறது. மாசற்ற இரத்தத்தால் நனைந்த இந்தப் பூமியில், வசந்தத்தின் வெள்ளோட்டம் நிகழ்வதைப் பார்க்க இப்போது என்னால் முடிகிறது.

போலின் : நேற்று ராத்திரி முழுவதும் நானும் எனது குடும்பத்தினரும் தூங்காமல் காத்திருந்தோம்; அவனது முகத்தை கடைசியாக ஒரு முறை பார்ப்பதற்காக, போலீசாரும், குண்டர்களும் கூட தூங்காமல் வீட்டைச்



அடையாளம் தெரியாமல் அநாதரவாய் நடந்த சவ அடக்கங்கள் —

ஒரு விம்மலின் ஒலி கூட எழாமல் நடந்து முடிந்த சவ அடக்கங்கள் —

நமக்கு முன்னால், இந்த வழியாக நடந்து போனவர் ஏராளம்—

இரத்தம் சிந்தி உறைந்த காலடிகள் —

சுற்றிக் காவல் இருந்தனர். அவர்கள் வாய்க்கு வந்தபடி ஆபாசமாக வசைபாடிக் கொண்டே இருந்தனர். மூன்று முறை அவர்கள் ஜன்னல் வழியாக வீட்டுக்குள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை விட்டெறிந்தனர். வீட்டுக்குள் யார் இருப்பது என்று அடிக்கடி அவர்கள் கதவைத் தட்டிக் கேட்டுக்கொண்டேயிருந்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் காலத்துக்குக் காலம் வளர்ச்சியடைந்து, இன்று இந்தியாவுக்குத் தலையிடி'யைக்கொடுக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்து விட்டது.

பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட நேரத்தில், காஷ்மீரின் பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களாக இருந்த போதிலும் அது இந்து மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காரணத்தால். இந்தியாவுடன் தொடர்ந்திருந்தது. அப்போதே ஆரம்பித்த சுயநிர்ணய உரிமைப் போராட்டம், இப்போது ஆயுதப் போராட்டமாக வடிவெடுத்துள்ளது.

ஆயுதந் தாங்கிய தீவிரவாதிகள் இந்திய அரசை எதிர்த்துக் கடுமையாகப்போரிடுகின்றனர். அவர்களது போராட்டத்தை நசுக்குவதற்கு இந்தியா அவசர காலச் சட்டத்தின் கீழ் தன்னுலான சகல வழிகளையும் கையாளுகின்றது.

இந்தியாவின் 'அடக்குமுறை'க்கு எதிராகப்பாகிஸ்தானிலும், பாகிஸ்தானின் 'தலையீட்டு'க்கு எதிராக இந்தியாவிலும் நாளுக்கு நாள் அரச அறிக்கைகள் வெளிவருவதோடு, ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெறுகின்றன. இரு நாடுகளும் மீண்டுமொரு யுத்தத்தைப் பற்றிச் சூசகமாகப் பேசுகின்றன.

## பிரபல ஆதரவு

தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு இணங்கப் பாகிஸ்தானின் சுதந்திர தினம், சென்ற ஆண்டு, முதன் முதலாகக் காஷ்மீரின் பல பகுதிகளில் கொண்டாடப்பட்டது.

இந்திய உள்துறை அமைச்சரின் மகள் செல்விறூபியா சயீத்தைத் தீவிரவாதிகளிடமிருந்து விடுவிப்பதற்காகச், சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட தீவிரவாதிகளைப். பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி நின்று வீரக்கோஷமெழுப்பி வரவேற்றனர்.

ஆயுதப் போராளிகளுக்கு மக்களின் பிரபல ஆதரவு உண்டு என்பதையே இவை காட்டுகின்றன.

# காஷ்மீர் போராட்டம் : மேலும் சில தகவல்கள்

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை பழமையானதெனினும், ஆயுதப் போராட்டத்துக்குப் பெருமளவில் ஆதரவு பெருகியது ஒரு அண்மைக்கால நிகழ்வு. அதற்கான காரணம் என்ன?

**சிவா சுப்பிரமணியம்**

தங்களது நியாயமான உரிமை என்று கருதும் ஒரு கோரிக்கையை முன்வைத்துப் போராடும் மக்கள், அப்போராட்டத்தை ஜனநாயக ரீதியில் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஆட்சியாளரின் அத்துமீறிய நடவடிக்கைகளினுல் உருவாகுமேயாஞல், அப்போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிமாற்றமடையும் என்ற நியதி காஷ்மீரிலும் நிருபிக்கப்பட்டுள்ளது.

1987 ஏப்ரலில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில், அப்துல்லா அரசு மிகப் பெருமளவில் மோசடிகள் செய்தது எனவும், அம் மோசடிகளின் மூலமே பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றது எனவும், அக் காலத்தில் பரவலாகக் குற்றஞ் சுமத்தப்பட்டது. இம் மோசடிகள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்தவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. மிகப் பலர் தேர்தல்களில் நம்பிக்கையிழந்து ஆயுதப்போராட்டத்தை ஆதரிக்கத் தொடங்கினர். செல்வி றூபியாவை விடுவிப்பதற்காகச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட தீவிரவாதிகளுள் ஒருவரான ஹமீட் ஷாயிக், 1987 தேர்தலில் அமிராகடல் தொகுதியில் முஸ்லிம் ஐக்கிய முன்னணி அபேட்சகரின் வெற்றிக்காகத் தீவிரமாக உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முரண்பாடுகள்

காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் மூன்று அமைப்புகளைப் பிரதானமாகக் குறிப்பிடலாம். காஷ்மீர் விடுதலை முன்னணி, பீப்பிள்ஸ் லீக், ஜமாதே இஸ்லாமி என்பனவே அவை.

பீப்பிள்ஸ் லீக்கும், ஜமாதே இஸ்லாமியும் காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணையவேண்டுமென ஆரம்ப காலந் தொட்டுக் கூறி வருபவை. காஷ்மீர் ஒரு சுதந்திர நாடாக இருக்க வேண்டும் என்பது, காஷ்மீர் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு. எனினும், இப்போது இவ்விடயம் முன்னணியைப் பிளவுபடுத்தியிருப்பதுபோல் தெரிகின்றது.

1984 பெப்ரவரியில் பர்மிங்ஹாமில் இந்திய ராஜதந்திரி ரவீந்திர மாத்ரே கொலை செய்யப்பட்டமை தொடர்பாக, 1987 ஜனவரியில் லண்டனிலிருந்து நாடுகடத்தப்பட்ட அமானுல்லா கான், காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர்களுள் ஒருவர். இவர் லண்டனிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்ருர். 1971 இல் இந்திய விமானமொன்றைப் பாகிஸ்தானுக்குக் கடத்திச் சென்றவரான ஹஷீம் கியுரெஸி என்ற மற்ருெரு தலைவர், அப்போது பாகிஸ்தானிலேயே வசித்து வந்தார்.

இவர்கள் இருவரும் ஷியாவுல் ஹக்கைச் சந்தித்துக் காஷ்மீரின் விடுதலைப் போராட்டம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தினுர்கள் என்றும், பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பிரதேசம் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதையும், சுதந்திர காஷ்மீர் பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருக்காது என்பதையும் பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே, தாங்கள் பாகிஸ்தானின் உதவியை ஏற்கமுடியும் எனவும் கியுரெஸி கூறினுர் என்றும், அதற்கு ஷியா சம்மதிக்காததால் கியுரெஸி பாகிஸ்தானிலிருந்து வெளியேறி, இப்போது ஹொலண்டில் வசித்து வருகின்ருர் என்றும் சொல்லப்படுகின்றது.

அமானுல்லா கான் ஷியாவின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டார்.

இப்போதைய போராட்டத்தில் காஷ்மீர் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் பீப்பிள்ஸ் லீக்கின் தலைவரும் 1989 செப்டம்பர் 27 ஆம் திகதி முதல் தடுப்புக் காவலில் இருப்பவரும், காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைய வேண்டும் என்பதில் தீவிரமானவருமான ஷபீர் ஷாவின் பெயர், செல்வி றூபியா விவகாரத்தில் காஷ்மீர் விடுதலை முன்னணியால் கையளிக்கப்பட்ட (விடுதலை செய்யப்பட வேண்டியவர்கள்) பட்டியலில் இடம் பெருததைச் சுட்டிக்காட்டி, தந்திரோபாய நடவடிக்கையாக அமானுல்லா கான் ஷியாவின் கருத்துக்கு உடன்பட்டாரேயொழிய, சுதந்திர காஷ்மீரே அவரது லட்சியம் எனக் கூறுவாரும் உளர்.

எவ்வாருயினும், காஷ்மீரின் எதிர்காலம் பற்றிய அடிப்படை விடயத்தில் போராட்ட அமைப்புக்குள்ளேயும், அமைப்புகளுக்கிடையிலும் முரண்பாடு தோன்றியிருப்பது வெளிப்படை. இது போராட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு பாதக அம்சம்.

காஷ்மீர் எவ்விதத்திலாவது பிரிந்து செல்வதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதில், இந்தியா திடமாக நிற்கின்றது. இந்தியாவின் கௌரவம் மாத்திரமன்றி, காஷ்மீரின் கேந்திர முக்கியத்துவமும் இதற்குக் காரணம்.

முடிவு என்ன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம் □

# இளவட்டம்

## காத்திருப்பு

உதயத்தில் —
உறக்கத்திலிருந்து எழுந்து
வாசலில் கோலமிட்டாள்......
வருங்காலத்தைப் பற்றிய
வண்ணக் கனவுகளுடன்

வாலிபம் தன் —
வேலையை முடித்துக் கொண்டு
வெள்ளி நரைகளை
வெளிக்காட்டிய போதும்,
திருமண வியாபாரத்தில் —
திரும்பிப் பார்க்கப்படாத
தன் இல்லத்தில்
காத்திருந்தாள்......
காலனின் காலடிகளுக்காக

— துளசி □

## மணம் வீசு

மலர்கின்ற புத்தாண்டில்
மணங் கமழுமா ?
பாரில் —
பழைமைகள் ஒழிந்து
புதுமைகள் துலங்கி,
பொங்கியெழும் புயற்காற்றும்
ஓய்ந்திடுமா ?
புதிய சகாப்தம் நிலவி
புவியெங்கும் பூபாள
ராகம் இசைக்க,
நன்ருய் மலர்ந்து
மணம் வீசு புத்தாண்டே !

— செல்வி
ஜெஸ்மின் அன்ஸார் □

## புழுதிப் பூக்கள்

எங்கள் வீதியோரத்தில்
ஓர் பூ மொட்டு
தான் மலர்வதற்கு
மாத்திர மல்ல ..
செடிக்கும் சேர்த்து
மடி ஏந்துகிறது ..

●

பிள்ளை நிலாவொன்று
எங்கள்
புழுதி வீதிகளில்
பகலில் உதிக்கின்றது.

●

கருவிலேயே
கை நீட்டிக் கேட்பதற்கு
யார் இவர்களுக்குக்
கற்றுக் கொடுத்தது?

●

பிறக்கும் போதே
இவர்கள் பேசிய
முதல் வார்த்தையும்
'அம்மா'வுக்கு பதிலாக
''பிச்சை'' என்றிருந்ததோ!

●

பாதையோரத்து
பாடசாலைகளில்
''பசிக்கிறது'' என்பதை
பாடமாக்கிப் படித்து
பிச்சை எடுப்பதில்
பி. ஏ. பட்டமெடுத்தவர்கள்

●

சகதிகளில் குளிக்கும்
இந்த சந்தனக் காடுகள்
இல்லாமைக்காக
அடிக்கடி
எரிந்து போகின்றன.

●

ஒரு விஞ்ஞானியின் கால்கள்
வலுவிழந்து ... வீணுக ...
புழுதி வீதியில்...
ஒரு மேதாவியின்
முக விலாசம்
மண், புழுதி மறைப்புக்களில்...
ஒரு திடமான உயிர்ச் சுவாலை
துடிப்பிழந்து
தெருவோரத்தில்...

— ஊரெழு தர்ஷினி □

## எத்தியோப்பிய எலும்புக் கூடுகள்

பிரபஞ்ச
அப்பியாசக் கொப்பியில்,
பசி அசதியில்
பிரம்மன்
கிறுக்கிய கார்ட்டூனே
இந்த எலும்புக் கூடுகள்?
இல்லையேல்,
உலக
அட்சய பாத்திரத்தை
வல்லரசுகள்
கொள்ளை யிட்டதால் —
உண்டான சதையில்லாப்
பிண்டங்களா இவை?
என்ன ஆனுலும் —
நாளை ஒருநாள்
இந்த எலும்புக் கூடுகள்
இந்த உலகையே
தின்னும்
என்பது திண்ணம் !

— வெலிமடை ஜஹாங்கீர் □

## பாசத்தைத் தேடி

''சந்தோஷம்''
தலைமறைவாகி
ரொம்ப நாளாகிவிட்டது.

''கவலை''
காலைப்பிடித்து
கெஞ்சி மன்ருடி
தோளில் உட்கார்ந்து
பல நாள்.

''நினைவுகள்''
அடிக்கடி வந்து
வீதி மறுப்புப் போராட்டம்
நடாத்தும்.

"தன்னம்பிக்கை"
ஆசை அருமையாய் — வந்து
ஆறுதல் சொல்லும்.

''தோல்வி''
நேற்றுக்கூட
என்னிடம் சொல்லிக் —
கவலைப்பட்டது
என்னிடம் வந்துபோயே
தன் செருப்பு
தேய்ந்து போய்விட்டதாக.

''பாசம்''
பல காலமாய்
இந்தப் பக்கமே
காணவில்லை.

ஊரெல்லாம்
ஓடி ஓடி
விசாரித்தேன்.
எல்லோரும்
'அதை'' தான்
சொல்கிருர்கள்

"நாங்களும்
பாசத்தைத்தான்
தேடுகின்ருேம்."

— த முரளிதரன் □

## வெண்ணிலா

கைக் குழந்தைகளின்
பார்வை மண்டலத்தில்
பரிசுப்பொருள் நீ.

இளம் உள்ளங்களின்
ஏக்கப் பார்வையில்
சிக்குண்ட கைதி நீ.

காதலனிற்கு — தன்
காதலியின் முகம்
காட்டும் கண்ணுடி நீ.

கன்னமிடும் கள்வனிற்கு
உலகில்
முதல் எதிரி நீ.

எழுத்தாளர்களின்
பேனுத் தூண்டிலில்
இரையாகும் புழு நீ.

வயதானவர்களிற்கு
இரவில் ஒளி தரும்
சந்திரன் நீ.

— சாவ. சண்முகதாசன் □

# கொம்யூனிச உலகின் நெருக்கடிகள்:

## 20ஆம் நூற்றுண்டின் திருப்புமுனை

சென்றவாரத் தொடர்ச்சி

உண்மையில் இந்தக் கோணலான ஆட்சி முறையை மாற்ருமைக்குக் காரணம், இந்த ஆட்சி முறையினுல் பலருக்கு ஆதாயம் ஏற்பட்டமையே. இந்த ஆட்சிமுறை தொடர்ந்து இருக்குமாறுல், அதிகார பீடங்களில் அமர்ந்துள்ள பெருமளவு அரச பூர்ஷுவாக்களுக்கும், குட்டி பூர்ஷுவாக்களுக்கும் கணிசமான அதிகாரமும் சிறப்புரிமைகளும் சுவறுர். ஆதலால், தங்களுக்கு மிகச் சாதகமாக அமைந்துள்ள இவ்வாட்சி அமைப்பை அவர்கள் ஏன் மாற்றவிழைய வேண்டும்? தனிப்பட்ட முறையில் இவர்களது உள்நோக்கங்கள் பலவகைப்பட்டவையாக இருந்திருக்கலாம். ஆனுல் இந்த ஆட்சி முறை சோஷலிசத்தை மிக மோசமாகச் சிதைத்து, ஒருவகை 'வக்கரித்த சோஷலிசத்தை' உருவாக்கிற்று. இப்படிக் கூறும் பொழுது பொருளாதார, சமூக முன்னேற்றங்கள், சாதனைகள் இங்கே ஏற்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனுல் சோஷலிச தத்துவத்தில் தொக்கி நிற்கும் ஜனநாயக சமத்துவ வாக்குறுதித் தன்மைகளை, இவை பல்வேறு அடிப்படையான வழிகளில் மறுக்கின்றன என்றே கூற வேண்டும். பெரும்பாலான கொமயூனிச நாடுகள் ஒரு சிறு வர்க்கத்தின் கூட்டு ஆட்சிக்குள் அமிழ்ந்திருந்தன; அமிழ்ந்திருக்கின்றன. இந்த ஆட்சிகளின் அதிகாரத்துவத் தன்மையே, இந்நாடுகளிலே ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகளுக்கு அடிப்படையான காரணம் என, நான் கருதுகிறேன். பொருளாதாரத் துறையிலிருந்து இன உறவுத்துறை வரை, இந்நாடுகளிலே காணப்படும் ஜனநாயகம் இன்மையும் குடியியற் சுதத்திரம் இன்மையும், வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதித்துள்ளன. இதனை உணர்ந்த கொர்பச்சேவ், இந்த ஆபத்தான நிலையைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி, ஒரே மருந்து, ஜனநாயகம் எனப்பிரகடனம் செய்தார். பெரிஸ்த்ரேய்க்கா மேலிருந்து பிறப்பிக்கப்பட்ட ஆணையால் உருவாகிய போதிலும், அருட்டுணர்வு பெற்ற ஒரு தனித் தலைவரின் விருப்பத்தால் பிறந்த ஒன்றல்ல. உண்மையில் அன்னியமயப்படுத்தப்பட்ட மக்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெறவேண்டிய தவிர்க்க முடியாத தேவையின் உந்து சக்தியாலேயே, அது உருவாகிற்று. தலைவர்களிடமிருந்து அன்னியப்பட்டு அவர்களைக் கிண்டல் செய்யும் மனப்பான்மை, வேறு கொம்யூனிச நாடுகளிலும்



ஸ்ராலின்

**கனகு**

காணப்படுகின்றது. இத்தகைய மனப்பான்மையே எல்லாத் துறைகளிலும் பாரிய நெருக்கடியை உருவாக்கியிருக்கின்றது. இதன் விளைவு சோவியத் பாணி பெரிஸ்த்ரேய்க்காவோ, அல்லது ஹங்கேரியிலும் போலந்திலும் எடுத்துள்ள வடிவங்களாகவோ அமையலாம். ஆனுல் ஒன்று மட்டும் நிச்சயம்: எந்தக் கொம்யூனிச ஆட்சியும் இவற்றின் தாக்கங்களுக்கு உட்படாது தப்பிப் பிழைக்கும் என்பது, சாத்தியமில்லை.

கொம்யூனிச அனுபவத்தில் இருந்து சோஷலிசவாதிகள் எதைக் கற்றுக் கொள்ளலாம்?

ஒன்றுமே இல்லை என நினைப்பது தவறு. 70 ஆண்டுகளுக்கு மேலாக, சோஷலிசம் என்ற பெயரில் — அது எவ்வளவுதான் ஆதாரமற்ற பெயராயிருந்தாலும்—பெறப்பட்ட அனுபவத்தை நாம் அவ்வளவு எளிதாகத் தூக்கி எறிய முடியாது. ஆகக் குறைந்தது, என்ன செய்யப்படாது — எடுத்துக்காட்டாக, திட்டமிடல், பொருளாதார வாழ்வை ஒழுங்கமைத்தல் போன்றவை — என்பதையாவது நாம் கற்றுக் கொள்ளலாம்.

மேற்குலகத்தில் மேலாண்மை பெற்றுள்ள வர்க்கங்கள் ஈட்டியுள்ள பெரிய வெற்றிகளில் ஒன்று, ஜனநாயகத்தை - பிரச்சார மட்டத்திலும், பேச்சளவிலும் — தமதாக்கியுள்ளதே. இதற்கு கொம்யூனிச நடைமுறைகளும் — தேர்தல்களில் 99.9 வீத பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி — மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களைக் கொடூரமாக அடக்குதல் — துணைநின்றன என்பதில் ஐயமில்லை.

அப்பட்டமாகச் சொல்வதாறுல், முதலாளித்துவ ஜனநாயகம் எவ்வளவு தான் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு கொம்யூனிச நாட்டின் ஆட்சியையும்விட, கூடிய ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாகவும், அடக்குமுறை குறைந்ததாகவுமே காணப்பட்டது.

பூர்ஷுவா ஜனநாயக அமைப்பில் இருப்பதையும் விட, தமது ஆட்சியில் மக்கள் கூடுதலாக அதிகார அமைப்புக்களில் பங்குபற்றினர் என, கொம்யூனிச ஆட்சிகள் வாதிடுகின்றன. ஆனுல் இந்த அதிகார அமைப்புக்கள் யாவும் கண்டிப்பான கட்சி / அரசு கட்டுப்பாட்டிற்குள் இருப்பதனுல், அவற்றிற்கு உண்மையான சுயாட்சி இல்லை என்றே கூறவேண்டும்:

பிரதிநிதித்துவ நாடாளுமன்ற ஆட்சி பூர்ஷுவா. ஜனநாயகத்தின் இன்றியமையாத பகுதியாகும். ஆனுல் சோஷலிச நோக்கில், இத்தகைய பிரதிநிதித்துவ ஆட்சி உண்மையான ஜனநாயகத்திற்கு வழிகோலாது. ஏனெள்ருல், பெரும்பாலான மக்கள் அரசியல் அதிகார மையங்களிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டவர்களாய் இருக்கின்றனர். எனவே பிரதிநிதித்துவ ஆட்சியை இயன்றளவு குறைந்த அளவில் கடைப்பிடித்துக் கொண்டு, பிரதிநிதிகளை வாக்காளரின் மேற்பார்வைக்கு உட்படுத்தி அவர்களைத்திருப்பி அழைக்கும் உரிமையை மக்களுக்கு வழங்கவேண்டும் என்றும், சோஷலிசவாதிகள் கருதுகின்றனர்.

பிரதிநிதித்துவ ஆட்சிக்கு மாற்றீடான இந்த சோவியத் முறை (இதனை கவுன்சில் கொம்யூனிசம் என்றும் அழைப்பார்கள்), எந்தவொரு கொம்யூனிஸ்ட் நாட்டிலும் வளர்ந்து செழித்தோங்கவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஏனென்ருல் கட்சியின் சர்வாதிகாரமே கொம்யூனிஸ்ட் ஆட்சியின் சாராம்சமாய் இருந்து வந்துள்ளது, பொல்ஷெவிக் புரட்சிக்காலம் தொட்டே, இந்தக் கவுன்சில் கொம்யூனிசத் திட்டம், ஓர் ஓர இயக்கமாகவே இருந்து வந்துள்ளது. இந்த நிலை மாறுவதற்கு அதிக சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

அதிகாரத்திறுல்தான் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த முடியும். அரசுக்கு உள்ளேயும் வெளியேயும், இத்தகைய கட்டுப்பாட்டு அதிகாரம் செயற்படுவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய வழி வகைகளில் பின்வருவன முக்கியமானவையாகும்: நிருவாகத்துறையையும் நிறைவேற்றுத்துறையையும் கட்டுப்படுத்தக்கூடிய பயன்முனைப்பான சட்டமன்றம், நீதித்துறையின் சுதந்திரம், பொலீசாரின் அதிகாரங்களைக் கண்டிப்பாகவும் சுதந்திரமாகவும் கட்டுப்படுத்தல், அதிகாரிகளின் தற்றுணிபு அதிகாரத்தை மட்டுப்படுத்திக் கட்டுப்படுத்துதல்.



கொர்பச்சேவ்

இத்தகைய ஒழுங்குகள் இதுகாலம் வரையும் கொம்யூனிச ஆட்சிகளிலே செம்மையாகச் செயற்படாமைக்குக் காரணம் கட்சியினதும், அதன் தலைவர்களினதும் மேலாதிக்கமே.

எல்லாவகையான அதிகார வடிவங்களையும் கட்டுப்படுத்துவதற்கும், சமன்படுத்துவதற்கும் சில ஒழுங்குகளை உருவாக்குவது, சோஷலிச ஜனநாயகத்திற்கு இன்றியமையாதது. இந்நோக்கில். சோஷலிச ஜனநாயகத்தில் அரசு அதிகாரமும், மக்கள் அதிகாரமும் ஒன்றை ஒன்று நிறைவுபடுத்துவதுடன், ஒன்றை ஒன்று கட்டுப்படுத்தும்.

இவ்வாறெல்லாம் கூறுவது, சுலபம்; நடைமுறைப்படுத்துவது கடினம் என ஒப்புக் கொள்ளும் அதே வேளையில், இதனைச் செய்வதை விட,வேறு வழியே இல்லை என்பதை கொம்யூனிச ஆட்சியின் அனுபவம் வலியுறுத்துகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். அரசாங்கத்தின் தேவைகள் எனக் கருதப்படுவனவற்றிற்காக ஜனநாயகத்தை விட்டுக் கொடுத்தால், இறுதியில் தீய ஆட்சியும், ஜனநாயகம் அறவே அற்ற நிலையுமே எஞ்சியிருக்கும்.

சோஷலிசம் என்ருல், முதலாளித்துவ ஜனநாயகத்தில் காணப்படும் சுதந்திரங்களை மேலும் விரிவுபடுத்துவதாகவும், மனிதத்துவம் வாய்ந்த ஆட்சியாகவும் மிளிரவேண்டும். □

---

## விடுதலை...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனைத் தூக்கிலிடுவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக நான் பிரிட்டோரியா மத்திய சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்தேன். சிறை அதிகாரி என்னிடம் சொன்னார்.

(அமைதி)

ஒளி குறைந்து கொண்டே போகிறது. அரையிருளில் ஒரு சிப்பாய் மேடைக்கு வருகிறான். போலின் அவனிடம் கையேந்தியவாறு ...

சிப்பாய் : (உணர்ச்சியை வெளிக்காட்டாதவனாக) உங்களுக்கு இங்கு வருவதற்கு உரிமை கிடையாது. உங்கள் மகனின் பிணம் தென் ஆப்பிரிக்க அரசுக்குச் சொந்தமானது. ஒரு வாரம் கழித்து வாருங்கள். அப்போது உங்கள் மகனின் பிணத்திற்கு என்ன நம்பர் என்று சொல்வோம். (சிப்பாய் போகிறான்)

(வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கிறது)

போலின் : கடைசியாக நான் அவனைப் பார்த்த போது அவன் சொன்னான்; என்னுடைய இந்தச் செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்லுங்கள். ரத்தத்திற்கு சாட்சி வகிக்கிற ஒவ்வொரு கெரில்லாவும் விடுதலைக்காகத்தான் உயிரைத் துறக்கிறான். விடுதலை கைக்கு எட்டும் தொலைவிலேயே உள்ளது. யாரும் அஞ்சத் தேவையில்லை. போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இவ்வாறெல்லாம் அவன் என்னிடம் சொன்னான்.

(பார்வையாளர்களின் விழிகளை உற்று நோக்கியவாறு அமைதியடைகிறார்.)

(வெளிச்சம் அதிகமாகிறது — அசரீரி இணைகிறது)

அசரீரி : போத்தா !

என்னைப் பொறுத்த வரையில் மிகவும் விலையுயர்ந்தது எனது விடுதலை தான். ஆனால், உங்கள் விடுதலையை அதைவிட உயர்ந்ததாகவே கருதுகிறேன். ஆயிரக்கணக்கானோர், விடுதலைக்காக தங்களை மாய்த்துக் கொள்கின்றனர். விடுதலையை நேசிக்கிற ஒரு மக்கள் திரள் அனுபவிக்கிற துயரங்கள் ஏராளம். நாங்கள் வாழ்க்கையை நேசிக்கிறோம் உங்களைப்போலவே. அதனாலேயே உங்கள் விடுதலையையும், எங்கள் விடுதலையையும் பிரிக்க முடிவதில்லை. நான் திரும்பி வருவேன்.

போலின் : (பார்வையாளர்களின் கண்களை நோக்கியவாறே தொடர்கிறார்)

அவன் வீரனாக இருந்தான் நிறைந்த மனதுடன் அவன் மரணத்தை எதிர் கொண்டான். எப்போதையும் விட வலிமை வாய்ந்தவனாய் அவன் காணப்பட்டான். நான் — அவனது அம்மா நான் பெருமிதம் கொள்கிறேன். பெஞ்சமினின் துயரம் நிறைந்த — அம்மா.

(அமைதி நிலவுகிறது)
(மெல்ல ஒளி குன்றுகிறது)
(இசை)

(அடுத்த இதழில் முடியும்) □

# நிகழ்வுகள்

### 29-1-90 திங்கள்

அமைச்சர் ரஞ்சனுடன் புளொட் சித்தார்த்தன் பேச்சுவார்த்தை நடத்தினர் □ மு.ப. 10 மணிமுதல் இரவு 10 மணிவரை கடைகளைத் திறந்து வைக்க இடமளிக்கும் கூட்டம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது □ செய்தித்தாள் இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென, ஸ்ரீலங்கா அச்சக சங்கத் தலைவர் கோரிக்கைவிடுத்தார் □

### 30-1-90 செவ்வாய்

மாணவர்களும் வர்த்தகரும் புலிகளால் கைதுசெய்யப்பட்டதாக அஷ்ரப் கூறினர் □ மட்டக்களப்பு மாவட்ட ஈ.ஐ.மு.நாடாளுமன்ற உறுப்பினர் இருவர் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளதாக செய்தி வெளியானது □ தனது முஸ்லிம் உறுப்பினரின் கொலையையடுத்து, விடுதலைப்புலிகள் காத்தான்குடியில் தேடுதல் நடத்தினர் □ சுன்னாகத்தில் இந்தியப் படையினர் ஷெல் அடித்ததில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர் □

### 31-1-90 புதன்

தமிழ் தேசியசபை அமைச்சர் ரஞ்சனுடன் இரண்டாந் தடவையாகப் பேச்சு நடத்தியது □ முஸ்லிம் மக்கள் அஞ்சத் தேவையில்லை என புலிகள் காத்தான்குடியில் தெரிவித்து, கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யுமாறு கோரினர் □

### 1-2-90 வியாழன்

கடைசி இந்திய வீரன் இருக்கும்வரை புலிகளின் ஆயுதக் கையளிப்பு இல்லையென, அமைச்சர் ரஞ்சன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார் □ விடுதலைப் புலிகள் அரசுடன் பேசியதை அடுத்து, 4000 தமிழ்க் குடும்பங்கள் வெலிஓயாவில் குடியமர்த்தப்படுவதான செய்தி வெளியானது □ கண்டி மேயராக திருமதி சந்திரா ரணராஜா பதவியேற்றார் □

### 2-2-90 வெள்ளி

தாம் கைதுசெய்த முஸ்லிம்களை, புலிகள் கல்முனையில் விடுதலை செய்தனர் □ கிழக்கில் பாதுகாப்பு இயந்திரம் ஊனமுற்றுள்ளதென, முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் அஷ்ரப் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது □

### 3-2-90 சனி

சுதந்திரதின வைபவத்தைப் பகிஷ்கரிக்கவில்லையென, தமிழ் தேசிய சபை அறிவித்தது □ மந்திரிசபை மாற்றம் மார்ச்சில் இடம்பெறலாமெனச் செய்திகள் வெளியாகின □

### 4-2-90 ஞாயிறு

சமாதானம், முன்னேற்றத்தினைப் பேண சகலரும் அயராது உழைக்கவேண்டுமென, தனது சுதந்திரதினச் செய்தியில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். மொழி, இனம், கோத்திரத்தின் பெயரால் எவருக்கும் அநீதி இழைக்க மாட்டோம் என, சுதந்திரதின வைபவத்தில் பேசுகையில் ஜனாதிபதி உறுதி கூறினார். திருகோணமலையில் இரண்டு குண்டுகள் வெடித்தன; யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை □

### 5-2-90 திங்கள்

காங்கேசன்துறையில் ஏற்பட்ட மோதலில் கடை ஊழியர் ஒரு கொல்லப்பட்டார் □ பொதுமக்கள் பாவிக்கும் படிவங்கள் யாவும் மும்மொழிகளிலும் இடம்பெறவேண்டுமென, பொதுநிர்வாக அமைச்சுபணித்தது □

### 6-2-90 செவ்வாய்

தமிழ் தேசிய சபையிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். விலகியது □ கிழக்கில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் 'முறுகல் நிலை' தோன்றியதைத் தெரிவிக்கும் தகவல்கள் தவறானவை யென்று, யோகி தெரிவித்தார் □ நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஆள் மாருட்டம் செய்த ஐ.தே.க. எம். பியான புத்திக குருகுலரத்ன பகிரங்கமாக மன்னிப்புக்கோரினர் □

### 7-2-90 புதன்

காங்கேசன்துறையில் இந்தியத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தவர்களில் 22 பேர் உடுப்பிட்டியில் வைத்து விடுவிக்கப்பட்டனர் □ முதல்வர் அ. வரதராஜப்பெருமாள் சில வாரங்கள் இந்தியாவில் தங்கியிருந்த பின், திருமலை திரும்பினர் □ அனைத்துக்கட்சி மாநாட்டை பகிஷ்கரிக்கப்போவதாக ஐ.சோ.மு அறிவித்தது □ இந்தியப் பொருள் இறக்குமதியில் மீண்டும் கவனம் எடுக்க வேண்டுமென்று அத்தாவுட செனிவிரத்ன நாடாளுமன்றத்தில் கோரினர் □

### 8-2-90 வியாழன்

அன்ரன் பாலசிங்கம் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர் □ ஆயுதக் குழுக்களுடன் சமாதானப் பேச்சு இல்லையென்று ஒரு பத்திரிகைப் பேட்டியில் பாலசிங்கம் தெரிவித்தார் □ பத்திரிகையாளர் மாநாட்டில் 'ரூ' மீது அமைச்சர் ரஞ்சன் குற்றஞ்சாட்டினர். குடியகல்வு சுங்கச் சட்ட மீறல்கள் பற்றி முதல்வர் அ. வரதராஜப் பெருமாளிடம் விளக்கம் கோரப்படுமென்றும். அவர் சொன்னர் □

### 9-2-90 வெள்ளி

இணுவிலில் விடுதலைப் புலிகளால் காலையில் பிடிக்கப்பட்ட இரண்டு இந்தியப்படை வீரர் மாலையில் விடுவிக்கப்பட்டனர் □ உட் பூசலால் தமிழ் தேசியசபை கலைக்கப்படலாமென செய்தி வெளியானது □ கல்வி அமைச்சர் தலைமையில் பத்தாயிரம் மாணவர் சிவனொளிபாத மலைக்குச் சென்றனர் □ பாணமை, உன்னிச்சைக்காட்டுப் பகுதியில் புலிகளுக்கும் ரி.என்.ஏ.க்குமிடையில் பெரும் மோதல் நடந்ததாக வெளிவந்த தகவல்கள் ஆதாரமற்றவையென, புலிகள் இயக்க முக்கியஸ்தர் காஸ்ட்ரோ கூறினர் □

### 10-2-90 சனி

முதலமைச்சர் வரதர் மீதான விசாரணையை சுங்கத் திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக, சிரேஷ்ட சுங்க கலெக்டர் ஹூங்கம தெரிவித்தார் □ 4 அம்சங்கள் குறித்தே அரசு — புலிகள் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகச் செய்தி வெளியானது □

### 11-2-90 ஞாயிறு

புலிகளுடனான உறவை சீர்படுத்த விரும்புகிறேம் என, ஈரோஸ் பாலகுமார் தெரிவித்தார் □ கன்னியாவில் இடம்பெற்ற மோதலில் ஏழு ஜவான்கள் பலியாகினர் □

### 12-2 90 திங்கள்

கருணாநிதியுடன் பேச, விடுதலைப் புலிகளின் குழுவொன்று சென்னை சென்றது □ மாகாணசபையைக் கலைத்துதேர்தலை நடத்தும்படி விடுதலைப்புலிகள் அரசாங்கத்தைக் கோரியது □

## 'கண்ணாடி' நாடகம்

யாழ் மறை மாவட்ட ஆணைக் குழுவின் அனுசரணையுடன் யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் வழங்கும் 'கண்ணாடி' என்னும் நாடகம் எதிர் வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி அரங்கில் இடம் பெறும்.

## சொற்பொழிவு

'இந்தியக்கலை பற்றி ஆனந்த குமாரசாமியின் கருத்துக்கள்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி மல்லிகா ராஜரத்தினம் உரைநிகழ்த்தவுள்ளார். மேற்படி உரை யாழ். எவ்லின் ரட்ணம் நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 30 மணியளவில் நடைபெறும்.

## மலை ஏறிய மாணவர்கள்

சென்ற போயா தினத்தன்று கல்வி அமைச்சினுல் ஒழுங்கு செய்யப்பட்ட சமய ரீதியான வைபவத்தின் ஏற்பாடாக சுமார் 10,000 பள்ளிக்கூட மாணவர்கள் சிவனொளிபாத மலை எறித்தரிசித்து, வந்துள்ளனர்.

இந் நிகழ்ச்சி கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## நமது நாடகம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடுப்பகுதி வரை கூட நாடகத்துறையில் காணப்பட்ட புதுமை நாட்டமும், புத்தூக்கமும் இன்று இல்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த வகையில் நமது நாடகத்துறையில் ஒரு தேககம் காணப்படுகின்றது என்பது உண்மை. இந்தத் தேக்கத்தின் தன்மைகளையும் அவற்றுக்கான சரியான அகப், புறக் காரணிகளையும் கண்டறியாமல், அதற்குரிய பரிகாரம் என்ன என்று தெரியாமல் அபராஜிதா போல் நமது நாடக முயற்சிகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக நையாண்டி பண்ணி நிராகரிப்பது தவருகும்.

நாடகத் துறையில் இன்றையத் தேக்கத்துக்கான காரணங்களில் ஒன்று நம்மிடையே நல்ல நாடக ஆசிரியர்கள் இல்லாமையாகும். குறிப்பிடத்தகுந்த கவிஞர்கள், கதாசிரியர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள். ஆனால் நாடக ஆசிரியர்கள் என்று யாரையும் சொல்வதற்கில்லை. மஹாகவி, முருகையன் சுந்தரலிங்கம் முதலியோர் சில நல்ல நாடகப் பிரதிகளை எமக்குத் தந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான்; ஆனால் அதைத் தொடர்ந்த வளர்ச்சிக்கு இங்கு ஏற்படவில்லை. பயிற்சிப் பட்டறைகள் மூலம் நடிகர்களையுருவாக்குவதுபோல் நாடக ஆசிரியர்களை உருவாக்க முடியுமா? என்று எனக்குத் தெரியவில்லை. ஆனலொரு நல்ல நாடகச் சூழல் நல்ல நாடக ஆசிரியர்களை உருவாக்க முடியும். அறுபதுகளின் பிற்பகுதியில் உருவாகிய ஆரோக்கியமான நாடகச் சூழல்தான் மஹாகவி, முருகையன் போன்றோரை நாடக ஆசிரியர்களாகவும் வளர்த்தெடுத்தது. மீண்டும் நாம் நாடகக் கலையை வளர்க்க வேண்டுமானுல் சுதந்திரமான ஒரு கலைச்சூழல் தோற்றுவிக்கப்பட வேண்டும். இதுதான் இப்போதைக்கு நான் கூறவிருப்புவது. □

## 'தான்' இருக்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்கக் கோட்பாடுகள் வெளியிடப்பட்டன அவற்றைப் பின்னர் வந்த யேசுநாதர் புறககோட்பாடுகளின் அவசியமின்மையைக் கூறிப் பத்துக் கட்டளைகளிலும் உள்ள ஒழுக்கக் கோட்பாடுகளும் இரண்டு கட்டளைகளுக்குள் அடங்கும் என்று கூறியதோடு அவற்றையே மக்கள் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்துகிருர். அவற்றில் ஒன்று கீதையில் கூறப்படும் அத்துவித (non-dual ty) தத்துவத்தைப் போன்றது. மற்றது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. "முழு மனத்துடன் உன் இதயத்தை தேவனிடத்தில் திரு புவாயாக" இது 'தான்' என்பது அறவே நீங்கும் போதே சாத்தியமாகும். எவ்வளவு இரத்தினச் சுருக்கமாக அத்துவித தத்துவத்தை யேசுநாதர் கூறியிருக்கிருர். இதையே கிருஷ்ணமூர்த்தியும் இன்னமும் சுருக்கமாக அவருக்கு உரிய பாணியில் "Where the self is, love is not, truth is not) என்று கூறுகின்ருர். கிருஷ்ணமூர்த்தியினுடைய முழுப் போதனையும் இந்த இருமையை (duality) நீக்குவதையே அடிப்படையாகக் கொண்டது. கிருஷ்ணமூர்த்தியினுடைய நோக்கைச் சரிவரப்புரிந்து கொள்ளாத சிலர் சொற்சிலம்பம் ஆடுகிருர்கள்; வசைபாடுகிருர்கள் யேசுநாதரின் இரண்டாவது கட்டளை "நீ உன்னைப் போலவே உன் அயலவனையும் நேசி" என்பதாகும். அறியாத ஒன்றுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கு, முன்னர் அறிந்தது ஒன்றுடன் சரியான தொடர்பை ஏற்படுத்துவது முக்கியம். அறிந்த-தெரிந்த-பழகிய அயலவனுடன் உறவு ஏற்படுத்த முடியாத, எங்களால் அறியாத ஒன்றுடன் எங்ஙனம் உறவு ஏற்படுத்த முடியும் என்பதையே இரத்தினச் சுருக்கமாக யேசுநாதர் இங்கு வலியுறுத்துகிருர். முதலில் இவ்வுலகத்துடன் ஒட்டிய வாழ்க்கையைப் பழுதற வாழத் தெரிய வேண்டும் என்பதே யேசுநாதரின் நோக்கமாகும். உன்னதமான வாழ்க்கையைப் பழுதறவாழும் படியே கிருஷ்ணமூர்த்தியும் எம்மை வற்புறுத்தி வருகிருர். இக்கட்டுரையைகிருஷ்ணமூர்த்தியால் 1931 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "The song of life" என்ற கவிதையுடன் முடிக்கின்றேன். இது வாழ்க்கையின் உன்னத நோக்கை மிகவும் தெளிவாக விளக்குகிறது. ஆங்கிலத்திலுள்ள இந்த அழகிய கவிதையை அப்படியே மொழிபெயர்த்துக் கீழே தந்துள்ளேன்.

நான் பெயரற்றவன்
மலைகளில் உலாவரும் மென்காற்றுப் போல்
தங்கும் இடமற்றவன்
அலைந்து திரியும் நீர்போன்றவன்
மாயமான தெய்வங்களுக்கு உள்ளது போல்
வழிபாட்டு நிலையமற்றவன்
உயரமான கோவில்களின்
நிழல் படியாதவன்
புனித நூல்கள் எதுவுமேயற்றவன்
மரபுகளால் பதனிடப் படாதவன்

உயர் பலி பீடங்களிலோ நறுமணத் தூபத்திலோ
பதட்டாரவாரச் சடங்குகளிலோ
ஆரவாரிக்கும் விழாக்களிலோ
இருப்பு இல்லாதவன்
செதுக்கி உருவாக்கப்பட்ட சிலையிலும் இல்லாதவன்
உயர்ந்த தோத்திரப் பாடல்களின்
இன்னிசை ஓசையிலுமில்லாதவன்

கொள்கைகளில் கட்டுப்படாதவன்
கீழான நம்பிக்கைகளால் சீரழிக்கப்படாதவன்
சமய கட்டுப்பாட்டிற்குள் சிறை பிடிக்கப்படாதவன்
சமய குருமாரைப் பணிந்து
துயரடையாதவன்
சமயத் தத்துவப் பொறியில் சிக்காதவன்
மாறுபட்ட மதப்பிரிவுகளின் மாஆற்றல் மிகு
ஆதிக்கத்தில் அகப்படாதவன்

உயர்வு தாழ்வு அற்றவன்
தொழுவோனும் தொழப்படுவோனும் யானே
யான் சுதந்திரமானவன்
விரிகடலை நாடிச் செல்லும்
அழகிய ஆற்றின் கீதமேஎன் கானமாகும்
பல இடங்களிலும் தடையற்று
அலைந்து அலைந்து திரியும்
யானே "வாழ்க்கை" □

திசை
THISAI

# மாகாண அரசு கலைக்கப்பட்ட பின்னரே!

''தற்போதுள்ள வட-கிழக்கு மாகாண அரசு கலைக்கப்பட்டு, பாரபட்சமற்ற தேர்தல் நடத்தப்படுமானால் தாம் அதில் பங்குபற்றத் தயாராய் உள்ளதாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கை கூறுகிறது.

தற்போது ஆட்சியிலுள்ள மாகாண அரசின் அமைப்பு முறை வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையே கொண்டுள்ளதால், அதன் அதிகாரப் பரவலாக்கம் பற்றி தேர்தலுக்குப் பின்னரே கதைப்பது உசிதம் என்றும், தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை உள்ளடக்குவதற்குரிய அமைப்பை உருவாக்குவதற்கு முதலில் அவர்களின் அபிப்பிராயங்களை விடுதலைப்புலிகள் அறியவுள்ளனர் என்றும் அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

## இசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

## நெல்சன் மண்டேலா — உலக விடுதலையின் குறியீடு

சென்ற ஞாயிறு நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார் என்பதைக் கேட்டு உலகின் சகல முற்போக்குச் சக்திகளும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளன.

1964 ஆம் ஆண்டில் வெள்ளை இன ஆட்சிக்கு எதிராகச் சதி செய்தார் என்ற சாட்டில் சிறைக்குள் தள்ளப்பட்ட இவர், கால் நூற்றுண்டுக்குப் பின்னர் தனது சிறைவாசத்திலிருந்து விடுதலை பெறுவதான இந்நிகழ்ச்சி, இன்றைய உலகின் பன்முகப்பட்ட போக்குகளின் குறியீடாய் உள்ள தென்றே கூறலாம்.

ஆபிரிக்கத் தேசிய கொங்கிரஸின் பிதா மகனுக விளங்கும் இவர், அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, மிகக் கேவலமாக வெள்ளையரால் ஒதுக்கப்பட்ட தமது கறுப்பின மக்களுக்காகப் போராடியதன் விளைவே இவர் பெற்ற 25 வருடச் சிறையாகும், தமது இளமைக் காலத்தின் ஒரு பகுதியை சிறையில் தாரை வார்த்து விட்டு, தமது 71 ஆவது வயதில் சிறையிலிருந்து வெளிவரும் இவர் உலகுக்குக் கொண்டுவரும் செய்தி என்ன?

மக்களின் அடிப்படை உரிமைகளை, அதற்கு வழி அமைக்கும் சுதந்திரத்தை மறுக்கும் சகல அடக்கு முறைகளும் உலகில் அழியத் தொடங்கியுள்ளன; இவை அதிக காலம் தாக்குப் பிடிக்கப் போவதில்லை என்பதையே இவரது விடுதலை கோடி காட்டுவதாய் உள்ளது.

மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் சர்வதிகார அடக்குமுறை தென்னுபிரிக்காவில் தனது குரூர முகத்தை அப்பட்டமாகவே வெளிக்காட்டி வந்தது என்பது ஒரு ஆறுதல். ஆனல் உலகின் பல பாகங்களில் இதே அடக்குமுறை தனது குரூர முகத்தை மறைத்து, 'சோஷலிஸம்' தொழிலாளர் சர்வாதிகாரம், 'ஜனநாயக ஆட்சி' என்று பல முகமூடிகளைப் போட்டுக் கொண்டு ஆடியது இன்னும் கேவலமானது மட்டுமல்ல ஆபத்தானதாகவும் இருந்தது.

இன்று அவை தகரத்தொடங்கியுள்ளன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றம் இந்த 'சோஷலிசம்' 'தொழிலாளர் சர்வாதிகாரம்' என்னும் வேஷங்களை வெட்டி வீழ்த்தியுள்ளன. அதேவேளை லத்தின் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும், கீழை நாடுகளான இலங்கை, ஜம்முகாஷ்மீர், நேபாளம் போன்றவற்றில் தோற்றியுள்ள போராட்ட அதிர்வுகளும் ஜனநாயக பூச்சுக்கு விழுந்து வரும் அடியே ஆகும்.

சீனவில் நடைபெற்ற மாணவர் புரட்சியும் இன்று தென்னுபிரிக்காவில் நிகழ்ந்து வரும் தளர்வுகளும் இனி வரப் போகும் பாரிய மாற்றங்களின் முன்னறிவிப்பே. நிகழப் போகும், நிகழ்ந்துவரும் இம்மாற்றங்களின் குறியீடாகவே நெல்சன் மண்டேலாவின் விடுதலை நிற்கிறது.

## பெண்கள் உரிமைக்கு ஒரு அரசியல் அமைப்பு

''பெண்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவதற்கு ஒரு அரசியல் அமைப்பு இல்லாவிட்டால் அவர்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியாது.'' இவ்வாறு எழுத்தாளரும், பெண்கள் விடுதலைக்கான போராட்ட முயற்சிகளிலும் அவற்றின் அமைப்புகளிலும் - அக்கறை கொண்டுள்ளவரான திருமதி சாந்தி சச்சிதானந்தம் கடந்த ஞாயிறு ஐலண்ட் பத்திரிகையில் கூறியுள்ளார்.

பெண்கள் சம்பந்தமாகப் பல கட்டுரைகளை எழுதியுள்ள இவர், 'பெண்களின் சுவடுகளில்' என்றொரு நூலை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

## நடவடிக்கை

அம்பாறை மாவட்டத்தில் அரசாங்கத்தினல் அனுமதிக்கப்படாது, ஆயுதம் தாங்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன அப்பகுதியின் பாதுகாப்புப் படையின் முக்கியஸ்தர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மாவட்டங்களுக்குரிய பாதுகாப்புப்படைகளின் மாநாடு ஒன்றில் பேசியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினர்.

## விடுதலையாகும் மண்டேலா

ஆபிரிக்கக் கறுப்பின மக்களின் தலைவரான நெல்சன் மண்டேலா கடந்த ஞாயிறு விடுதலை செய்யப்பட்டது சம்பந்தமாக சகல நாடுகளும் ஏகோபித்த பாராட்டுகளை தென்னுபிரிக்க அரசுக்குத் தெரிவித்துள்ளன.

கடந்த கால் நூற்றுண்டுக்கு மேலாக சிறையில் வாடிய இவரை தென்னுபிரிக்க இன ஒதுக்கல் அரசு, விடுதலை செய்ய முன்வந்ததற்கான காரணம், அதன்மேல் பொது நல அமைப்பில் உள்ள நாடுகளோடு ஏனைய பல நாடுகளும் பொருளாதார ரீதியான தடையை விதித்தமையே என்பது தெளிவு. நெல்சன் மண்டேலா 1964 ஆம் ஆண்டு வெள்ளையின ஆட்சிக்கு எதிராகச் சதி செய்தார் என்ற குற்றச் சாட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மைக் ரைசன் தோற்றரா?

கடந்த ஞாயிறு ரோக்கியோவில் நடைபெற்ற உலக அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டி, குத்துச் சண்டை உலகை பெரும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது. அதற்குக் காரணம் 'இரும்பு மனிதன் மைக்' என குத்துச் சண்டை உலகில் அழைக்கப்பட்டு வந்த மைக் ரைசன், ஜேம்ஸ் பஸ்ரர் டக்ளஸ் என்பவரால் கடந்த ஞாயிறு 10-ஆவது றவுண்டில் தோற்கடிக்கப்பட்டதே. மைக் ரைசன் இதுகாலவரை 37 குத்துச் சண்டைப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியுள்ளார். இதுவே அவர் தோல்வியுற்ற முதல் போட்டியாகும். இது அவர் பங்கு பற்றிய 38 ஆவது போட்டியாகும்.

எட்டாவது றவுண்டில் ரைசன் கொடுத்த குத்திலிருந்து, டக்ளஸ் மீள்வதற்கு கொடுக்கப்பட்ட எண்ணும் நேரம் பிழையானது என்பதால் இது பற்றிய தீர்ப்பு இம்மாதம் 20 ஆம் திகதி அறிவிக்கப்படும் என உலகிலுள்ள மூன்று குத்துச் சண்டை சங்கங்களில் இரண்டு சங்கங்கள் கூறியுள்ளன.

## சிறுபான்மை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சிறுபான்மை இனங்களின் பிரச்சினையே இன்று ரஷ்யாவின் முக்கிய தலையிடியாக மாறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 'ரோ'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொகைதீன் அறிக்கையொன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாது '' அக்கரைப்பற்றிலுள்ள உப்புக் கரைச்சியில் 200 முஸ்லிம் இளைஞர்கள் இந்தியர்களிடம் பயிற்சி பெற்றுர்கள். இந்தியப்படை இருந்த போது கொங்கிரஸ் படையினர் பணம், அரிசி, தங்கம் பெற்று வந்தார்கள். பயமுறுத்தல் செய்தார்கள். கொலை செய்யப்பட இருந்தவர்களில் முஸ்லிம்களின் பட்டியலும் இருந்தது. பலர் கொல்லப்பட்டார்கள்.

கிழக்கு மாகாண மக்கள் எல்.ரி.ரி.ஈக்கு நன்றி தெரிவிக்கிறுர்கள்.

கூட்டணியுடன் அஷ்ரஃப் இருந்தபோது நாடு பிரிக்கப்படுவதை ஆதரித்தார். இப்பொழுது இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையை எதிர்க்கிறுர்.

## பார்வை ஏன் பறிபோனது

றெனல்ட் பெற்றி என்னும் ஆங்கிலேயர் தனது கண்களின் சக்தி மிக்க பார்வையால் பல குணப்படாத நோய்களைக் குணப்படுத்தி வந்தார். இவர் முதலாம் உலக யுத்தத்தின் போது, காயப்பட்ட தனது சக போர் வீரர்களை களத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தபோது, தனது பார்வைக்குள்ள சக்தியை உணர்ந்தார். இவரின் பார்வைக்கும் அறிமுகத்திற்கும் இலக்கான போர்வீரர்கள் அதிசயிக்கத்தக்க விதத்தில் தமது காயங்களிலிருந்து உடனேயே குணமாகுவதைக் கண்டார்,

பின்னர் இவர் தனது சொந்த ஊரில் இப்பணியைப் புரிந்து அதிகபணம் சம்பாதித்தார். ஆனல் பின்னர் திடீரென இவரது ஆற்றல் குறைந்து போனதால் யாரும் இவரை நாடி ''வைத்தியம்'' செய்யச் செல்லவில்லை. மக்களால் கைவிடப்பட்ட இவர் தனிமையில் விடப்பட்டு கன காலம் இருந்தார். இவர் 1968 இல் தனது 81-வது வயதில் இறந்தபோதே இவர் 20 வருடங்கள் தனது கண் பார்வை முழுவதையும் இழந்திருந்தார் எனத் தெரிய வந்தது.

## A. K. யுடன் தமிழ் இளைஞர் கைது

20 தமிழ் இளைஞர்கள் A K 47 துப்பாக்கியுடன் கொழும்பில் பிடிபட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள்பற்றி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கருத்துத் தெரிவிக்கையில் தென்னிலங்கையில் குழப்பத்தை விளைவிப்பதற்காக 'ரோ' வினல் அனுப்பப்பட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனல் இதை இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது.

## தொடர்பகத்தில் பயிற்சிப் பாசறை

உளவியல் கலந்த ஆன்மீக அடிப்படையில் 'பணி நோக்கிய மனித வளர்ச்சிப் பயிற்சிப் பாசறை' ஒன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'தொடர்பகத்'தில் ஆரம்பமாகியுள்ளது.

பதினெரு வாரங்களுக்கு நடைபெறும் இப்பயிற்சிப் பாசறையை ஈழத்தில் அறிமுகப்படுத்தி, இயக்கிவரும் சா.ம. செல்வரட்ணம் அடிகளார் இதுபற்றி விளக்குகையில், ''பணிநோக்கி வெளி நோக்கும் அதேவேளை உள் நோக்கிய பயணமொன்றிற்குப் பணியாளரை அழைப்பது இப்பயிற்சி'' என்று தெரிவித்தார்.

ஆண்டு தோறும் இப்பயிற்சிப் பாசறையை நடாத்தத் திட்டமுள்ளதாக, தொடர்பகச் செய்தி கூறுகின்றது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 16 2-1990 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89